தமிழ்ப் பொழில்

தமிழாராய்ச்சித் திங்களிதழ்

மலர் : 10

உள்ளுறை

1. தமிழ் அரசியல் இதழியல் வரலாற்றில் திரு. வி. க. ... 433

டாக்டர் வி. அரசு
விரிவுரையாளர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

2. மகனின் உதவி ... 446

அமுத—இளவழகன், எம். ஏ , பி. லிட்.,
தமிழாசிரியர்
புனித சின்னப்பர் மேனிலைப் பள்ளி,
நெய்வேலி.

3. தொல்காப்பியச் செய்யுளியல் காண்டிகையுரை ... 449

(சென்ற இதழ் தொடர்ச்சி)
பேராசிரியர் ச. பாலசுந்தரம்.

4. மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர் ... 465

(சென்ற இதழ் தொடர்ச்சி)
மு. சண்முகம் பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
சுவடிப்புலம்-ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

5. பெருமொழிச் சிந்தனை ... 473

(மகாவாக்கிய விசாரம்)
டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி,
எம். ஏ., எம். ஓ. எல். பி. எச். டி.

தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு — 2016

துணர்: 59 குரோதன — தை மலர்: 10

ஜனவரி — பிப்ரவரி 1986

தமிழ் அரசியல் இதழியல் வரலாற்றில் திரு. வி. க.

டாக்டர் வீ. அரசு
விரிவுரையாளர்
தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

இந்திய இதழியலுக்கு சுமார் இருநூறு ஆண்டுகளே வயது. இந்தியாவில் வணிகம் செய்ய வந்து, பின்னர் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய ஐரோப்பியர்களே இந்திய

இதழியல் முன்னோடிகள். அவர்கள் வணிகம் புரிந்த காலத்தும், பின்னர் ஆட்சிபுரிந்தபோதும் மக்களுடன் தொடர்பு கொள்ள இதழ்களைப் பயன்படுத்தினர்.

இந்தியாவில் வாழ்ந்த ஐரோப்பியர் குறித்த பல்வேறு பிரச்சனைகள், வணிகக கம்பெனி தொடர்பான செய்திகள், இங்கிலாந்தில் நடைபெறும் நிகழ்ச்சிகள், இந்திய மன்னர்களின் போக்குகள், இராணுவ விவரங்கள், அரசாங்க அறிவிப்புகள் போன்றவைகளே தொடக்ககால இதழ்ச் செய்திகள். இதற்கு முன் மன்னர்கள் ஓலை வழியே செய்த பணியை இவர்கள் வளர்ச்சியடைந்த அச்சு எந்திர உதவியுடன் செய்தனர். இவைகளே செய்தி இதழியலின் (News Journolism) தொடக்க கால நிலை காலப்போக்கில் வளர்ச்சி அடைந்த அரசியல் பொருளாதார மாற்றங்களுக்கு ஏற்ப இவ்விதழியல் வளரத் தொடங்கியது. இவ்வகை வளர்ச்சிப் போக்கே அரசியல் இதழியல் வரலாறாக அமைகிறது.

செய்திகளை வெளியிடுதல் என்ற நிலை மாறி, அடுத்த கட்ட வளர்ச்சியாக மதக்கருத்துக்களைப் பரப்பும் பணி இதழியலில் நடைபெறத் தொடங்கியது. ஆளும் வர்க்கம் மக்களைப் பண்பாட்டு அடிப்படையில் தம் ஆதிக்கத்திற்கு உட்படுத்தச் செய்யும பணிகளில் ஒன்றே, அதன் மதத்தைப் பொது மக்களிடம் பரவச் செய்வது. ஐரோப்பியர் காலனிய நாடுகளில் இப்பணியை ஆழமாகவே செய்தனர். அவ் வகையில் தொடக்க காலத்தில் இவ்வகை மதக்கருத்துக்களைப் பரப்பும் முயற்சிக்கு அடிப்படையான கருவிகளில் ஒன்ருக இதழ்களைப் பயன்படுத்தினர்.

செய்திகளை மக்களிடம் கொண்டு செல்லுதல், பண்பாட்டுக்கூறுகளில் ஆதிக்கம் செலுத்தல் என்ற பணிகள் சாதாரண மக்களின் மொழியில் செய்யப்படுவதின் மூலமே அதன் முழுப்பயனைப் பெற முடியும். இதனால் வட்டார மொழிகளிலும் (Vernacular Languages) இதழ்கள் உருவாகும் நிலை ஏற்பட்டது. இந்தப் பின்னணியில் பம்பாய், கல்கத்தா, சென்னை ஆகிய நகரங்களில் வாழ்ந்த மக்கள் பேசிய மொழி களில் இதழ்கள் தொடக்க காலத்தில் வெளிவரத் தொடங்கின, இவ்வகையில் நடைமுறை அரசியலுக்குத் தேவையான செய்தித் தொடர்பும், மக்களைப் பண்பாட்டு ஆதிக்கத்திற்குக் கொண்டுவரும் மதக்கருத்துப் பரப்பலும் தொடக்க கால இந்திய அரசியல் இதழியற் கூறுகளாக நாம் இனம் காணலாம்.

ஆங்கிலக் கல்வி வளர்ச்சி, இந்தியாவில் பருவ இதழ்கள் (Periodicals) உருவாக வழிகண்டது. ஆங்கிலக் கல்வி பெற்ற இந்தியர், ஆங்கிலத்தில் வரும் இதழ்களைப் போன்று நமது வட்டார மொழிகளிலும் இதழ்களைக் கொண்டுவரும் முயற்சியில் இறங்கினர். இவ்விதழ்களில் விநோதமான செய்திகளை ஆங்கிலத்திலிருந்து தொகுத்து வெளியிடுதல், ஆங்கில இதழ்களில் வரும் கதைகளை மொழிபெயர்த்து வெளியிடல் அல்லது தழுவி எழுதுதல் என்ற போக்குகளே நிலவின. இவ்வகைப் பருவ இதழியலில் நேரடி அரசியற் கருத்துக்கள் இடம்பெறுதல் இரண்டாம் நிலையில் இருந்தது. அறிவுரை பேசுதல் இடம் பெற்ற அளவிற்குக்கூட நேரடி நடைமுறை அரசியல் பெறவில்லை. ஆனால் இவ்வகை இதழ்களில் மதக்கருத்துக்கள் மிகுதியாக இடம் பெற்றன.

இவ்வகைப் போக்குகளில் வளர்ந்து வந்த இதழியல், இந்திய விடுதலைப்போர் பரவலாக மக்களிடம் செல்வாக்குப் பெற்ற சூழலில் தான் வேகமாகவும், வட்டாரத் தன்மைகளை மிகுதியாகப் பெற்றும் வளரத் தொடங்கியது. இந்தக் காலக் கட்டமே இந்திய மொழிகளில் அரசியல் இதழியல் அதற்குரிய உத்வேகத்தோடு வளரத்தொடங்கிய காலமாகும். மேற்குறித்த, அரசினர் நடத்திய இதழ்களில் மக்களைச் சென்றடைந்ததை விட, இந்திய விடுதலையை அடிப்படையாகக் கொண்ட இதழ்களே பெரிதும் சென்றடைந்தன. இந்திய அரசியலில் இவ்வகைக் காலகட்டமாக 1857 ஐக் கூற முடியும். இந்திய அரசியல் இதழியல் அதன் உண்மையான பொருளில் நடைமுறைக்கு வந்ததும் இந்தக் கூறுகளை வெளிப் படுத்தும் வகையில், ஆங்கிலம் வட்டார மொழிகள் ஆகிய வற்றில் இதழ்கள் வெளிவரத் தொடங்கின.

தமிழ்நாட்டிலும் மேற்குறித்த பின்னணியில்தான் இதழியல் வளரத் தொடங்கியது. தமிழ்நாட்டைச் சேர்ந்த முத்துசாமி அய்யர் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப் பட்டதை, சென்னையில் வெளியான, ஆங்கிலேயருக்குச் சார்பான ஆங்கில இதழ் கிண்டல் செய்தது. இதனைக் கண்டு கோபமுற்ற இளைஞர்களின் கூட்டு முயற்சி 'இந்து' இதழாக வடிவம் பெற்றது இவ்விளைஞர்களில் ஒருவர் ஜி. சுப்பிரமணிய அய்யர். இவரே தமிழ் அரசியல் இதழியலின் முன்னோடி. முதல் இந்திய விடுதலைப்போர் உருவான சூழலில், படித்த வர்க்கம் அவ்வெழுச்சிகளைக் கண்டு, அவ்வுணர்வுகளில் பங்கு கொள்ளும் நோக்கத்திலும், அதே நேரத்தில் ஆங்கிலேயர்

களைப்போல் தாங்களும் பல்துறை ஆற்றல் மிக்கவர்கள் என்பதைக் காட்டும் போக்கிலும் பல்வேறு அரசியல் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இதன் விளை பொருள்களில் ஒன்றாகவும் இந்திய அரசியல் இதழியல் வளர்ச்சியைக் காண முடியும். இந்தப் பின்னணியில் செயல் பட்டவர்களில் ஒருவரே ஜி. சுப்ரமணிய அய்யர்.

"இந்து பத்திரிக்கை ஆங்கிலப் பத்திரிக்கையாக இருப்ப தால், இங்கிலீஷ் பாஷையறியாத தமிழ் ஜனங்களும் தேச சமாசாரங்களை அறிந்து கொள்ள மார்க்கமில்லாதிருப்பதை யோசித்து, 'சுதேசமித்திரன்' பத்திரிக்கையை 1882 ஆம் வருஷம் மார்ச்சு மாதத்தில் வாராந்திரமாகத் துவக்கினேன்".[1]

இவ்வகையில் இவரால் தொடங்கப்பெற்ற சுதேசமித்திரனே தமிழ் அரசியல் இதழியலின் தொடக்கம் ஆகும். இவ்வரலாறு பின்கண்ட போக்கில் வளர்ச்சி பெற்றது. சுதேசமித்திரன் (1882), இந்தியா (1907), இன்றைய சமாச்சாரம் (1908), திராவிடன் (1916), தேசபக்தன் (1917), நவசக்தி (1920), தமிழ்நாடு (1922), சுயராஜ்யா (1922), குடியரசு (1928), சுதந்திரச் சங்கு (1930), தினமணி (1933), ஜனசக்தி (1937), தினசரி (1944), ஊழியன் 1946) என்பனவாகும்.

மேற்குறித்த வரலாற்றுப் பின்னணியில் திரு. வி. க. அவர் களின் தமிழ் அரசியல் இதழியல் (Tamil Political Journalism) பங்கை நாம் மதிப்பீடு செய்ய இயலும். இந்திய விடுதலைப் போராட்டத்தில் 1900-1910 என்பது தீவிரவாதிகள் தீவிரமாகச் செயல்பட்ட காலம். அரசியல் உணர்வுள்ள நடுத்தர வர்க்க இளைஞர்கள் இந்திய விடுதலைப்போரில் மிகுதியாக ஈடுபடத் தொடங்கிய காலமும் இதுவே. விபின் சந்திரபாலர் (1858—1932), பாலகங்காதர திலகர் (1856—1920), இலாலா லஜபதிராய் (1865—1928), ஆகிய தலைவர்களின் பேச்சுகள் இந்துமதப் பிடிப்புள்ள இளைஞர்களிடத்தில் ஆழமான செல்வாக்குச் செலுத்தியது. தமிழ்நாட்டில் வ. உ. சி. (1872—1936), பாரதி (1882—1921) சுப்பிரமணிய சிவா (1884—1925) போன்றவர் களை மேற்குறித்தோர் பேச்சுக்கள் தீவிரவாதிகளாகச் செயல் பட வழிகண்டது.

"இந்தியாவில் இன்னும் பெருமளவில் இருந்த சமூக மிதவாத சக்திகளை அடிப்படையாக வைத்து, பண்டைய ஹிந்து அல்லது ஆரிய நாகரிகம் புதிய 'மேற்கத்தி நாகரிகத்தை

விட ஆன்மீகத்துறையில் உயர்ந்தது எனக் கருதி சநாதன ஹிந்து தர்மத்தை அடிப்படையாக வைத்து இவர்கள் (தீவிரவாதிகள்) தேசீய இயக்கத்தை வளர்க்க முயன்றார்கள்''[2] என்ற ரஜனி பாமிதத் அவர்களின் கணிப்பு அடிப்படையிலேயே மேற்குறித்தவர்கள் செயல்பட்டனர். இவர்களின் மீது அளவு கடந்த ஈடுபாடு கொண்டவராகவே திரு. வி. க. அரசியலில் கவனம் செலுத்தத் தொடங்கினார். அவரது கூற்றுப்படி 1907 இல் சென்னைக் கடற்கரையில் பேசிய விபின்சந்திர பாலர் சொற்பொழிவுதான், அரசியல் எழுச்சியை திரு. வி. க. வுக்கு உருவாக்கிய முதன்மை நிகழ்ச்சி. மேற்குறித்தவர்கள் கொண்டிருந்த அரசியல், சமயக் கண்ணோட்டங்களோடு திரு. வி. க. பெரிதும் தன்னை இனம் கண்டு கொண்டார். ஆனால் இந்திய விடுதலைப் போர் வரலாற்றில் தீவிரவாதிகளின் செல்வாக்கு 1910 – க்குப் பின் குறையத் தொடங்கியது. பல புதிய தன்மைகள் இடம்பெறத் தொடங்கின. தீவிரவாதிகள், மிதவாதிகள் இணைப்பு முயற்சியை அடிப்படையாகக் கொண்டு 'ஹோம் ரூல்' (1914) இயக்கம் போன்றவை உருவாக்கப்பட்டன. இதன் வளர்ச்சி, காந்தியடிகளின் அரசியல் செல்வாக்குப்போன்றவை தீவிரவாதிகள்செல்வாக்குப் படிப்படியாக வேறு கோணத்தில் வடிவம் பெறும் சூழலை உருவாக்கிற்று. (இதனை இங்கு விரித்து எழுத இடமில்லை).

மேற்குறித்த அரசியல் சூழலில் திரு. வி. க. அவர்களின் நேரடி அரசியல் தொடர்பு நிகழ்ந்தது. இந்தக் காலத்தில் திரு. வி. க. அவர்களின் நிலையைப் பின்கண்டவாறு வரையறை செய்யலாம். தீவிரவாதிகளின் அரசியல், சமயக் கருத்துக்களின் மீது ஈடுபாடு ; அன்னிபெசன்ட் அம்மையார், சுப்பராயகாமத் போன்றவர்களுடன் நெருங்கிய தொடர்பு ஆகியவற்றுடன் சைவசமயக் கல்வியில் ஆழ்ந்த பயிற்சி கொண்ட தமிழாசிரியர். இந்தச்சூழலில்தான் தமிழாசிரியர் பணியைத் துறந்து அரசியல் உலகில் நுழைந்தார்

அரசியல் இதழியல் என்பது சூழலின் வெளிப்பாடாகவே அமையும். இதனைத் திரு.வி.க. தமது பத்திரிக்கைகளில் வெளிப்படுத்தத் தொடங்கினார். தாம் நடத்திய பத்திரிக்கைகள் இரண்டும் அரசியற் கிளர்ச்சிக்கெனவே தோற்றுவிக்கப்பட்டதாகவும் திரு. வி. க. கூறுகிறார். 'தேச பக்த'னும், 'நவசக்தி'யும் அரசியற் கிளர்ச்சிக்கெனத் தோற்றுவிக்கப்பட்ட பத்திரிக்கைகளாதலால், அவைகளில் பெரிதும் அவ்வப்போதைய அரசியல் நிலையை ஒட்டி ஆசிரியக்

கட்டுரைகள் எழுதப்படுவது வழக்கம்" [3] இந்தப் பின்னணியில் 7—12—1917 முதல், 'தெய்வமிகமேல்', 'சக்கரநெறி நில்', 'தேசத்தோடொத்து வாழ்' என்ற இலச்சினையைத் தாங்கிய 'தேசபக்தன்' இதழ் ஆசிரியரானார். இவரது தலையங்கங்கள், அவர் கொண்டிருந்த அரசியல் கண்ணோட்டத்தை அடிப் படையாகக் கொண்டு எழுதப்பட்டன. 1—12—1919 'தேசபக்தன்' தலையங்கம் பின்வருமாறு அமைகிறது.

"நமது தலைவராகிய திலகர் பெருமான் இனிச் செய்ய வேண்டிய வேலையை இப்பொழுதே செப்பஞ் செய்யத் தலைப்பட்டு விட்டதாகத் தெரிய வருகிறது. திலகர் பெருமான் ஒவ்வொரு மாகாணமும் சென்று ஆங்காங்குள்ள தேசீயக் கட்சியினர்க்கு எழுச்சி உண்டாக்கப் புறப்படப் போகிறார் என்று அறிகிறோம். அடுத்த வாரம் அவர் நமது சென்னை மாகாணத்துக்கும் விஜயஞ் செய்யப் போவதாகக் கேள்விப் படுகிறோம். அவர் மாகாண யாத்திரை செய்ய உத்தேசித் திருப்பதன் நோக்கம் அமிர்தசரஸ் காங்கிரஸ் தேசீயக் கொள்கை செல்வாக்குப் பெற வேண்டுமென்பதேயாகும். இனி இந்தியா பூரணமாகத் தேசீயக் கட்சியார் வசமிருத்தல் வேண்டும். காலவேகத்தோடு கலந்து வேலை செய்வோர் தேசீயக் கட்சியினரே. ஆதலால் தேசீயக் கட்சியினர் இம்முறை அமிர்தசரஸில் கூடப்போகும் காங்கிரஸில் தம் செல்வாக்கை நிறுத்திக் கொள்ள வேண்டும். கட்சி பேதங்களையே பாராட்டிக் கலாம் விளைக்கும் போலித் தேசீயக் கட்சியார் சிலர் உளர். உண்மைத் தேசீயக் கட்சியினர் எல்லாக் கட்சி யினரையும் நேசித்து அவரையும் தேசீயக் கட்சியில் சேர்த்துக் கொள்ள முயல வேண்டும். மிதவாதத்தலைவர்கள் இங்கிலாந்து சென்று புதிய உணர்ச்சி பெற்றுத் திரும்புகிறார்கள். அவர்கள் இனிப் பழைய மிதவாதிகளாக இருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்".[4]

'தேசபக்தன்' இதழை முதலீடு செய்து நடத்தும் சுப்பராய காமத், 'ஹோம் ரூல்' இயக்கத்தைச் சார்ந்தவர். அவ்வியக்கம் ஆங்கிலேயர்களிடம் போராடுவதில் மிதவாதிகளை அடிப் படையாகக் கொண்டு, தீவிரவாதிகளை இணைத்து நடத்தத் திட்டமிட்டது. ஆனால் திரு.வி.க. தீவிரவாதிகள் மீது ஈடுபாடு கொண்டு, அவர்களது கருத்துக்களை அடிப்படை யாகக் கொண்டு, மிதவாதிகளை இணைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இதனை மேற்குறித்த அவரது தலையங்கம் உறுதிப்படுத்துகின்றது. இந்தச் சூழலில்தான் தேசபக்தன்

ஆங்கிலேய அரசின் பத்திரிக்கைத்தடைச் சட்டத்திற்கும் ஆட்பட்டது. இதனை 'அச்சுச் சட்டந் தொலையுமோ' என்ற தலைப்பில் 4—12—1919 இல் எழுதிய தேசபக்தன் தலையங்கம் உறுதிப்படுத்துகின்றது.[5]

"நம் தலைவர்கள் இங்கிலாந்து சென்று திரும்புவதால் ஒரு பயனும் விளையாது. அந்தச் சட்டமும் பிற கொடுஞ்சட்டங்களும் ஒழியவே மாட்டா. அவைகளை ஒழிக்க வேண்டிய இடம் இந்தியாவே. இருந்த இடத்திலிருந்தே கொடுமையை ஒழித்துக் கொள்ளலாகும். இதை நம் தலைவர்கள் உணரும் நாள் எந்நாளோ? அந்நாளே அச்சு சட்டந் தொலையும் நாள்" என்று எழுதியுள்ளார்.

மேற்குறித்த செய்திகள் அடிப்படையில் பின்வரும் கூறுகளை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. 'பிரிட்டிஷ் — இந்தியா' என்ற பெயரில் அச்சகம் நடத்தி, அதில் தேசபக்தனை வெளியிட்ட மிதவாதிகள் மீது அனுதாபம் கொண்ட பத்திரிக்கை நிர்வாகத்தின் கருத்துக்கு முரண்பட்ட நிலையில், தீவிரவாதிகளை அடிப்படையாகக் கொண்டு, அவர்களது நியாயங்களை எழுதுவதில் திரு. வி. க. அக்கறை காட்டினார். இந்நிலை பத்திரிக்கை ஆசிரியருக்கான எழுத்துச் சுதந்திரத்தைக் காட்டுவதாக அமைகிறது. திரு. வி. க. வின் இவ்வகைச் செயற்பாடுதான், அவர் 'தேசபக்தனை' விட்டு வெளியேறும் நிலைக்கும் ஆட்படுத்திற்று. இதனை அவரது வாழ்க்கைக் குறிப்பில், மறைமுகமாக எழுதியிருப்பதைக் காண முடிகிறது.[6] திரு. வி. க. வின் இந்த நிலை தமிழக அரசியல் இதழியல் வரலாற்றில் பத்திரிக்கை ஆசிரியரின் கருத்துச் சுதந்திரத்திற்கான போராட்டமாகக் காண முடிகின்றது. பிற்காலத்தில் பல்வேறு அரசியல் பத்திரிக்கைகளில்[7] ஏற்பட்ட இவ்வகைப் போராட்டங்களை அறியும்போது, திரு. வி. க. அவர்களின் இடத்தைத் தெளிவாகக் காண முடிகிறது.

ஆளும் ஆங்கிலேயர் அதிகாரத்திற்கு எதிராகச் செயல்படும் நிலையிலிருந்து மாறுபட்டு,ஆங்கிலேயர்களிடம் விண்ணப்பித்து, நமக்குரிய அதிகாரங்களைப் பெறும் நடைமுறையை, திரு. வி. க. காலத்து 'சுதேசமித்திரன்' மேற்கொண்டது. இந்தக் காலகட்டத்தில் சுதேசமித்திரன் ஆசிரியராக இருந்த அரங்கசாமி அய்யங்கார், திரு. வி. க. குறிப்பிடும் இங்கிலாந்து சென்று மீண்ட தலைவர்களில் ஒருவர். சுதேசமித்திரனின் இந்நிலைப்பாட்டால், ஆங்கிலேய அரசின் கொடுமையான

அச்சுச் சட்டங்களிலிருந்து தப்பிக்க முடிந்தது. ஆனால் இந்நிலைக்கு மாறுபட்டுப் போராடியதன் விளைவாக, தேச பக்தனுக்கு ஆங்கிலேயர் அச்சுறுத்தல் அடிக்கடி நிகழ்ந்தது. தேசபக்தன் பதிவும் ஒருமுறை (28—2—1919) பறிமுதல் செய்யப்பட்டது. அரசியல் இதழியல் என்பது, ஆளும் வர்க்கத்திற்கு எதிரான போராட்டக் கருவிகளில் முக்கியமான ஒன்றாகவே வரலாற்றில் செயல்பட்டு வந்துள்ளது. இதனைத் திரு வி.க. உணர்ந்து செயல்பட்டார். இந்நிலையும் வரலாற்றில் இவருக்குரிய இடத்தை மதிப்பீடு செய்ய வழி வகுக்கின்றது.

திரு. வி. க. தேசபக்தன் தொடங்கிய காலத்தில் தமிழகத்தில் 'வகுப்புவாதங்கள்' உருப்பெறத் தொடங்கின. இதற்கு எதிரான போரையும் திரு. வி. க. 'தேசபக்த'னில் தொடங்கி வைத்தார். இவ்வியக்கம் ஆளும் ஆங்கிலேயரின் 'பிரித்தாளும் சூழ்ச்சிக்கு' வழிவகுக்கும் என்பதைத் தெளிவுபடுத்திய அதே வேளையில், அவ்வியக்கம் உருப்பெற்றதற்கான சமூக காரணங்களை உணர்ந்து, அந்த அடிப்படையில் 'சென்னை மாகாணச் சங்க'த்தையும் திரு.வி.க. உருவாக்கினார். இவ்வகை அரசியல் போராட்டங்களுக்கான கருவிகளாகவே 'தேசபக்தன்', நவசக்தி'யை இவர் பயன்படுத்தினார். வகுப்புவாதம் தொடர்பான இவரது இதழியல் போராட்டம் 'தேசபக்தனை' விட 'நவசக்தி'யில் பெரிதும் மேற்கொள்ளப்பட்டதை நம்மால் உணரமுடிகிறது. 'ஜஸ்டிஸ் கட்சி' தொடர்பாக 1—12—1923 நவசக்தி தலையங்கத்தில் பின்வருமாறு எழுதுகிறார்.[8]

"ஜஸ்டிஸ் கட்சி இனித் தனித்து நில்லாது காங்கிரஸோடு கலந்து ஒடுங்குதல் வேண்டும். ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் இனி தேசப்போக்கையுணர்ந்து காங்கிரஸ்வாதிகளாகத் திரும்புதல் வேண்டும். ஜஸ்டிஸ் கட்சி போன்ற கட்சிகள் ஒத்துழையாமைக்குப் பெருந்தடைகளாக இருக்கின்றன.... அடிமை நாட்டில் வாழுவோருள் கட்சியென்ன? சாதிச் சண்டைகளென்ன? கட்சிச் சண்டைகள், சாதிச் சண்டைகள் போதும். அவைகளைக் கடலில் எறிய வேண்டிய காலம் வந்திருக்கிறது". இதே போக்கில் பிற்காலத்தில் 'குடியரசு' இதழுடன் திரு. வி. க. நடத்திய போராட்டங்களையும் காண முடிகிறது.[9] 'தேசபக்தன்' காலத்தில் 'திராவிடன்' (1916) இதழுக்கு எதிராகவும், 'நவசக்தி' காலத்தில் 'குடியரசு' போன்ற இதழ்களுக்கு எதிராகவும் இவர் போராடிய போக்கைக் காண முடியும்.

இவ்வகையில் 7 — 12 — 1917 முதல் 22—7—1920 வரை 'தேசபக்தன்' ஆசிரியராகப் பணியாற்றிய போதும், 22 — 10 — 1920 முதல் ஜனவரி 1941 வரை 'நவசக்தி' ஆசிரியராகப் பணியாற்றியபோதும், திரு. வி. க. அவர்களது அரசியல் இதழியல் பங்கு பற்றி, பின்கண்ட வகையில் வரையறை செய்யலாம்.

''அவர் வாழ்ந்த காலத்து நடைபெற்ற இந்திய விடுதலைஇயக்கத்துக்கு ஒரு போராட்டக்கருவியாகவே,அவரது கண்ணோட்டத்தில் இதழ்களைப் பயன்படுத்தினார். அவ்விடுதலைக்கு எதிரான சக்திகள் அனைத்தையும் வென்றெடுப்பதிலும் பத்திரிக்கையைப் பயன்படுத்தினார். 'மிதவாதத்து' க்கு எதிரான பொராட்டம்' 'சுதேசமித்திர' னுடன் அவர் நடத்திய போராட்டம். 'பிரித்தாளும் சூழ்ச்சிக்கு' எதிரான போராட்டம், அவர் 'திராவிடன்', 'குடியரசு' ஆகியவற்றுக்கு எதிரான போராட்டம் என்று கூற முடியும். இந்த அடிப்படையில் ஓர் அரசியல் இதழுக்கு உரிய அடிப்படைப் பணிகளைத் திரு. வி. க. செய்திருக்கிறார் என்றே கருதமுடிகிறது.

இந்திய விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருந்த இந்தச் சூழலில், குறிப்பாகத் திரு. வி. க. அரசியலில் நுழைந்த காலத்தில் இந்தியாவில் நிலவிய மற்றொரு முரண்பாடு, உழைக்கும் வர்க்கம் ஆளும் வர்க்கத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டது. தொடர்ச்சியான உழவர் போராட்டங்களும், தொழிலாளர் போராட்டங்களும் நடைபெற்றன. இதனை விடுதலைப் போரில் ஈடுபட்ட படித்த மேல்தட்டு வர்க்கத்தைச் சார்ந்த தலைவர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. இதற்கென அவர்கள் நடத்திய இதழ்களில் எவ்விதமான இடமும் அளிக்கவில்லை. குறிப்பாக திரு. வி. க. தேசபக்தன் நடத்திய காலத்தில் வெளிவந்த 'சுதேசமித்திரன்', 'திராவிடன்' ஆகிய இதழ்களில் எவ்வகைக் குறிப்புகளையும் காணமுடியவில்லை. ஆனால் இதனைக் கவனத்தில் கொண்டார் திரு. வி. க.

''பொருளாதார உரிமையற்ற வெறும் அரசியல் உரிமை என்பது பணக்காரரர் ஆட்சியாய்ச் சாதிமதப் பூசல்களைப் பெருக்கி விரிப்பதாகும். நமது நாட்டுக்கு அரசியல் விடுதலையும் வேண்டும் ; அதனூடே பொருளாதார விடுதலையும் விரவி நிற்றல் வேண்டும்''[10] என்பது திரு. வி. க. வின் கணிப்பு.

அக்டோபர் புரட்சி, முதல் உலகப் போர் போன்ற நிகழ்வுகளால் உலகம் முழுவதும் வளர்ந்துவரும் தொழிலாளர் இயக்கத்தைத் தமிழகத்திலும் வளர்ப்பதில் இவர் அக்கறை கொண்டார். இந்தப் பின்னணியில் சென்னைத் தொழிலாளர் (27—4—1918) சங்கத்தை உருவாக்குவதில் முன்னின்றார். இச்செயற்பாடுகளுக்கான கருவியாக 'தேசபக்தன்', 'நவசக்தி' இதழ்களைப் பயன்படுத்தினார்.

சர்வதேசத் தொழிற் சங்கத்தில் தொழிலாளர்கள் 8 மணி நேர வேலைக் கோரிக்கை முன்வைத்த செய்தியை வெளியிட்டார் (2—12—1919 தேசபக்தன்) ; இந்தியாவில் சிறுவர் வேலைக் கொடுமை பற்றியும் (2—12—1919 தேசபக்தன்) எழுதியுள்ளார். தேசபக்தன் தொடங்கி இரண்டு ஆண்டுகள் கழிந்து புதன்கிழமை தோறும் (13—12—1919) 'தொழிலாளர் அநுபந்தம்' என்ற சிறப்புப் பகுதியை வெளியிட்டார். இதில் தொழிலாளர் நீதிக்கதைக் கொத்து, பொதுஜன ஊழியம், தொழிலாளர்கள் சிக்கல் குறித்துத் தொழிலாளர்கள் எழுதிய கடிதங்கள் ஆகியவற்றை வெளியிட்டார். இவ்வகையில் 'தேசபக்த'னில் இவர் தொடங்கிய பணி, இவர் தேசபக்தனை விட்டு விலக நேர்ந்தபோது, தொழிலாளர்கள் நன்கொடை அடிப்படையில், விலகிய மூன்று மாதங்களில் 'நவசக்தி' இதழைத் தொடங்க முடிந்தது. இது குறித்து திரு. வி. க. பின்கண்டவாறு எழுதுகிறார்.

"சென்னைத் தொழிலாளர் சங்கச் சார்பில் கூடிய ஒரு பொதுக்கூட்டத்தில் எனது நிலைமையை விளக்கி வயதடைந்த தொழிலாளர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரூபா கொடுத்தல் சிறப்பு என்றும், கட்டாயமில்லை என்றும், விரும்புவோரே உதவி செய்ய முன்வரலாம் என்றும் விண்ணப்பஞ் செய்தனர். அவர் விண்ணப்பம் ஐயாயிரம் ரூபா திரட்டியது. அது முடிப்பாக எனக்குக் கொடுக்கப்பட்டது. வேறுசில நண்பர் சுமார் இரண்டாயிரந் திரட்டி அனுப்பினர். அத்தொகையும் இத்தொகையும் கொண்டு ஓர் அச்சுக்கூடம் வாங்கப்பட்டது; ஒரு வாரப்பதிப்புத் துவங்கப்பட்டது ; அச்சுக்கூடத்துக்குச் 'சாது அச்சுக்கூடம்' என்று பெயர் சூட்டினேன்; வாரப் பதிப்புக்கு 'நவசக்தி' என்ற பெயர் அணிந்தேன்".[11] இவ்விதம் அவர் தொடங்கிய நவசக்தி 'முதல்' இதழில் பின்கண்ட ஒன்பது நோக்கங்களை அவர் வெளியிட்டார் (22—10—1920). அவற்றில் தொழிலாளர்கள் தொடர்பானவை பின்கண்டவைகளாகும்.

*ஜனநாயக முறைத்கு அடிகோல வேண்டுவது தொழிலாளர் இயக்கமாதலால் அவ்வியக்கத்தை வளர்க்க முயலல்.

* தொழிலாளர் இயக்கத்தை வலுப்படுத்தவும் அவர்கள் குறைகளை நிவர்த்திக்கவும் அவர்கள்வழி ஆட்சிமுறையைத் திருப்பவும் அவர்கட்கெனத் தனியாக உழைக்கவும் தொழிற் கட்சியை வகுத்தல்".

மேற்குறித்த செய்திகளால், இந்திய விடுதலைக்குப் பத்திரிக்கைகளை எவ்வகையில் போராட்டக் கருவியாகப் பயன்படுத்தினாரோ அதற்குக் கொஞ்சமும் குறையாத அளவில் 'தேசபக்தன்', 'நவசக்தி' யைத் தொழிலாளர் இயக்கத்திற்குப் பயன்படுத்திய தன்மைகளை அறிய முடிகின்றது. அன்றைய தமிழ் அரசியல் இதழியலில் இல்லாத ஒன்றை இவர் மட்டுமே செய்திருப்பதைக் காண முடிகிறது. இந்நிலை தமிழ் அரசியல் இதழியல் வரலாற்றில் இவருக்குரிய நிலையான இடத்தை அறிய வாய்ப்பளிக்கின்றது. அன்றைய சூழலில் எண்ணெய்த் தொழிலாளர் சங்கம், அலுமினியத் தொழிலாளர் சங்கம், கார்ப்பரேஷன் வொர்க்ஷாப் சிப்பந்திகள் சங்கம், பெரம்பூர் ரயில்வேக்காரர் யூனியன் போன்ற பல்வேறு சங்கங்கள் உருவாக இவரது இதழியல் பணி அடித்தளமாக அமைந்த வரலாற்றுச் செய்தியை மறக்க இயலாது.

திரு. வி க. வின் வாழ்க்கை என்பது 1917க்கு முற்பட்ட சூழலில் ஒரு தன்மையதாகவும், 1917—1940 வரை இதழியல் துறையிலும், பிற்காலம் 1940—1953 மிகுதியாகச் செய்யுள் நூல்களை எழுதிய காலமாகவும் அமைகிறது. இடைப்பட்ட காலத்தில், தமிழ், அரசியல் இதழியல் போக்கில் பல புதுமையான நிகழ்வுகளை இவர் முன் வைக்கிறார். இதுவரை நிகழ்ந்து வந்த இதழியல் மொழி அமைப்பில், மொழிக்குக் கொடுக்க வேண்டிய முக்கியத்துவத்தை அவரது கண்ணோட்டத்தில் தந்து,அதற்கு முன் தாம் கைக்கொண்டிருந்த மொழி நடையையும் மாற்றிப் புதுமையான மொழி நடையைக் கையாள்கின்றார். விடுதலைப் போராட்டத்தை மட்டுமே பேசி வந்த அரசியல் இதழியலில் தொழிலாளர் போராட்டங்களை முன் வைத்த செயலும் இவர் செய்த புதுமையே.

சமூக உணர்வுள்ள மனிதன், தான் வாழும் காலத்தில் சமூகத்தில் நிலவும் முரண்பாடுகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டு அதற்கான போராட்டத்தில் தன்னை ஈடுபடுத்திக்

கொள்ள வேண்டும். அந்த வகையில் திரு. வி. க. இந்திய விடுதலைப் போராட்டத்தில், தொடக்கத்தில் தீவிரவாதி களைச் சார்ந்தும், படிப்படியாக காந்தியத் தத்துவத்தைக் கைக்கொண்டும் இதழ்களை நடத்தினார். சமகால வாழ்க்கை யில் இருந்த இந்தியர்களின் அடிமை வாழ்வுக்கு எதிராகப் போராடினார். அப்போராட்டத்தில் 'பிரித்தாளும் சூழ்ச்சியை' எதிரி பயன்படுத்தும்போது அதனை முறியடிக்கும் சரியான பார்வையில் தமது இதழ்களை இவர் பயன்படுத்தினார்.

இளமை தொடங்கி இவர் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த சைவ சமயக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இதழியலில் நுழைந்தார். அதன் வளர்ச்சியாக காந்தியத்தை, இந்திய விடுதலைக்கானஆன்மீக வழியாக இவர் தெரிவு செய்தார். இதன் போக்கில் சமரச சன்மார்க்கத்தை இறுதிக் காலங்களில் பெரிதும் முன்வைத்தார். இவ்வகையான வாழ்க்கைப் போக்கில் திரு. வி. க. தமிழ் அரசியல் இதழியல் துறைக்கு அளித்த பங்களிப்பு மிக ஆழமானது. அந்த மரபு பிற்காலத்தில் தமிழகத்தில் திரு. வி. க. போன்ற கருத்துச் சார்புடையவர்கள் கூடப் பின்பற்றவில்லை. சனநாயகப் போக்கில் பிரச்சனைகளைஅணுகும் திரு. வி. க. மரபு வளரவில்லை இதனால் திரு. வி. க. பங்கு குறிப்பிட்டுச் சொல்லும் வகையில் இன்றும் உள்ளது.

இந்திய அரசியல் இதழியல் வரலாற்றின் முற்காலம் ஆங்கிலேயரின், ஆட்சி அதிகாரம், மதம் ஆகியவற்றை வெளிப் படுத்தும் கருவியாக வடிவம் பெற்று, இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை செயல்பட்டது. இந்திய விடுதலைப் போரை இருபதாம் நூற்றாண்டின் தொடக்க கால இந்திய அரசியல் இதழியல் அடிப்படையாகக் கொண்டது. தமிழ் அரசியல் இதழியலும் அப்படியே வளர்ந்தது. இந்த வளர்ச்சி யில் தமிழ் அரசியல் இதழியலை வெள்ளை ஆட்சி எந்திரத்துக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தாமல், தமிழ் மண்ணில் நிலவிய சிறப்புக் கூறுகளைக் கவனத்தில் கொண்டு, அதற்கென அரசியல் இதழியலைப் பயன்படுத்துவதில் திரு.வி.க. தனியிடம் பெறுகிறார். இந்தப் பின்னணியில் தமிழ் அரசியல் இதழியல் வரலாற்றில் போராடும் உழைக்கும் மக்களுக்காகவும், பிரித்தாளும் ஆங்கிலேயரின் சூழ்ச்சிக்கு எதிராக, தமிழகத்தில் உருப்பெற்ற இயக்கத்திற்கு எதிராகவும் போராடிய திரு.வி.க. வின் தன்மைகள் தனித்துப் பார்க்க வேண்டிய முக்கியக் கூறுகளாகும்.

அடிக்குறிப்புகள்

1. சுதேசமித்திரன், 18 — 1 — 1908, (மேற்கோள்) மா. ரா. இளங்கோவன் முதல் நாளிதழ்கள் மூன்று, ப. 36.
2. ரஜினி பாமிதத், இன்றைய இந்தியா (மொ. பெ.), ப. 404.
3. திரு வி. க., தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத்திரட்டு (இரண்டாம் பகுதி), முகவுரை, (1935).
4. தேசபக்தன், 1—12—1919 தலையங்கம்.
5. ,, 4—12—1919 ,, .
6. திரு. வி. க வாழ்க்கைக் குறிப்புகள், பக். 234 பார்க்க.
7. தினமணி இதழில் டி. எஸ். சொக்கலிங்கத்திற்கு ஏற்பட்ட நிலையைக் கூறலாம்.
8. நவசக்தி, 1—12—1923.
9. பார்க்க: தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு, ப. 342.
10. தமிழ்த்தென்றல் திரு.வி.க. (தொகு.) ஈ.சா. விசுவநாதன், (மேற்கோள்.) 'முதலியார் வாழ்க', வெ. சாமிநாத சர்மா, ப.44.
11. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்புகள், ப. 237.

உதவியவை

இளங்கோவன், மா. ரா., முற்காலத் தமிழ் இதழ்கள் மூன்று, சேகர் பதிப்பகம், சென்னை, 1982.

சாமிநாத சர்மா, வெ., நான் கண்ட புலவர், பிரபஞ்ச ஜோதி பிரசுராலயம், புதுக்கோட்டை, 1959.

திரு. வி. க., தமிழ்ச்சோலை அல்லது கட்டுரைத் திரட்டு (இரண்டாம் பகுதி) சாது அச்சுக்கூடம், சென்னை, 1935.

திரு. வி. க, திரு. வி. க. வாழ்க்கைக் குறிப்புகள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1982

'தேச பக்தன்'- (நாளிதழ்)

'நவசக்தி'- (நாளிதழ்)

Natarajan, J., History of Indian Journalism, Publication Division, Govt. of India, 1935.

மகனின் உதவி

அமுத — இளவழகன், எம்.ஏ., பி.எட்,
தமிழாசிரியர்,
புனித. சின்னப்பர் மேனிலைப் பள்ளி,
நெய்வேலி.

புலமைத் தமிழ் பொலிந்த அவ்வையார், 'பெரியது கேட்கின் எறிதிகழ் வேலோய் !' என விளித்துப் பலவற்றை விளக்குகிறார்! முடிவில் 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் அரிதே' என்று முத்தாய்ப்பு வைக்கிறார் ! ஏன் தெரியுமா? இறைவனே தொண்டர்தம் உள்ளத்து ஒடுக்கமாகி ஓங்குகிறான் !

இத்தகு பேசரிய பெருமைக்கு முழு முதலாகப் பொருந்தும் அடியார்களில் 'அரசர்' ஆனவர் ஒருவர். அவர் 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்று தல உலா வருகிறார். எங்குள்ள ஊர்களுக்கும் சென்றவர், திங்களூர்க்கும் வருகிறார். வழியில் ... ... எப்போதும் சிவனடியே சிந்திக்கும் அப்பூதியடிகளின் அருட்பணி கண்டு வியக்கிறார்.

கோப்பெருஞ் சோழனைப் பாராத போதும் தீராத நட்புக் கொண்ட சீராளர் பிசிராந்தையாரைப் போல ..... அப்பூதியடிகளுக்கும் அரசர் மேல் ஆராத காதல். அது கண்டு மகிழ்ந்த அரசர் அங்கே தங்குகிறார். அமுதுண்ண உடன்பட்டிருக்கிறார்.

அமுதமைத்த பின்னர், மூத்த மகன் வாழை இலை ஈர்ந்து வரப்போகிறான். அப்போது கையினில் சுற்றிய பாம்பொன்று தீண்டி விடுகிறது. இலையோடு திரும்பிய மகன் இறந்து விடுகிறான். பெறலரும் புதல்வன் தன்னைப் பாயினுள் பெய்து மூடிப் புறக்கடையில் வைத்தபின் பரிமாறப் புறப்படுகிறார்.

அமுதுண்ண அமர்ந்த அரசர் திருநீறு வழங்குவதற்காக மூத்த மகனை அழைக்கிறார். அப்பூதியாரோ "இப்போது இங்கு அவன் உதவான்" என்கிறார். 'மகன் உதவான்' என்ற அக் கருத்தையே இங்குச் சிந்திக்கிறோம்.

திருநீறு அணிவிப்பதற்காக, நாவுக்கரசர் மூத்த மகனை அழைக்கிறார். அதற்கு 'அவன் உதவான்' என்ற பதில் எந்த வகையில் இயையும்? இதைச் சிந்திக்கிற போது அங்கே வள்ளுவர் பாதை வந்து சந்திக்கிறது. மகன் உதவான் என்ற பதிலோடு

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்"

என்ற பொதுமறை பொருந்தி வருகிறது.

'மகன் உதவான்' என்றதும் 'யாருக்கு உதவான் ?' என்று வினவத்தோன்றும். அரசர் அப்பூதியார் இருவருக்குமே இனி உதவான். இதையே பொதுவாகச் சொல்லியிருக்கிறார். ஏனெனில் முன்பே இருவர்க்கும் உதவி விட்டான். இலையை ஈர்ந்து வழங்கியதால் அரசர்க்கு உதவினான். ஈர்ந்து வரச் செல்லுமுன்பும், விடம் தீண்டியும் விரையும்போதும் அப்பூதியார்க்கு உதவுகிறான்.

ஆம்! இப்போது இங்கு உதவான் என்பதால் எப்போதோ-எங்கோ உதவியிருக்கிறான் என்பது தெளிவன்றோ! அப்படி என்னதான் உதவியிருக்கிறான் ?

'இம் மகனைப் பெற இவன் தந்தை என்ன தவம் செய்தாரோ' என்று பாராட்டும்படி நடப்பதுதான் மகன் தந்தைக்குச் செய்யும் உதவி. இது தான் திருவள்ளுவர் முடிவு. இப்படித்தான் அப்பூதியாரின் அருமைப் புதல்தனும் உதவியிருக்கிறான்.

அடியார்க்கு உதவும் அருட்பணிக்குள் நம்மையும் தந்தை ஈடுபடுத்தியிருக்கிறாரே என்று பூரிப்பில் பூத்தமுகப் பொலிவுடன் இலை ஈர்ந்துவரப் புறப்படுகிறான். ஆம், நல்ல தாய் தந்தை ஏவ நான் இது செய்யப் பெற்றேன்' என்று மகிழ்ந்து விரைகிறான். பாம்பு விடம் வேகமாகத் தலைக்கேறுகிறது. என்றாலும் விடவேகத்தைவிட வேகமாக இலையுடன் விரைகிறான். அமுது செய்யத் தாழ்க்க யான் இச் செய்தியைச் சொல்லேன் என்று திருந்திய கருத்துடன் செல்கிறான்.

அப்பூதியாரின் மூத்த மகனின் இத்தகு உள்ள உணர்வுகளை உன்னிப் பார்க்கும் எவரும் வள்ளுவன் வகுத்ததுபோல் 'இவன் தந்தை என் நோற்றான் கொல் ?' என வியப்பர் என்பதில் வியப்பில்லை அல்லவா ? இந்த உதவியைத் தன் மகன் முன்பே செய்து விட்டதால் தான் இப்போது இங்கு அவன் மகனாக வந்து உதவான் என்றாரோ ?

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி பற்றிய சிந்தனையில் இரு பெருந் தமிழ் உள்ளமும் இணைகின்றனவன்றோ! சேக்கிழாரையும் திருவள்ளுவரையும் தெய்வப் புலவர் என்பது முழுமெய் என்பதும் புலப்பாடன்றோ ! தெய்வப் புலமைத் திறம் காண்போம் ! சைவந் தமிழ் வளம் சேர்ப்போம் !

எத்தனை விலங்குகள்: எவ்வளவு பூச்சிகள்:

விலங்கியலார் நம்மைச் சுற்றி வாழும் உயிரினங்களான விலங்குகள், பூச்சிகள், பறவைகள் முதலியவற்றைப் பற்றிப் பல புதிய செய்திகளை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் கணக்குப் படி, பத்து லட்சத்துக்கும் அதிகமான விலங்கு இனங்கள் நம்மோடு வாழ்கின்றன. பூச்சி இனத்தில் மட்டும் கிட்டத்தட்ட 10 லட்சம் இருக்கின்றனவாம். அரிஸ்டாடில் காலத்தில் 60 வகைப் பூச்சிகள் தான் இருந்தன என்று அவர் கூறுகிறார். இதேபோல, அரிஸ்டாடில் 454 வகை விலங்குகளைத்தான் அறிந்திருந்தார். ஆனால், நாமோ இன்று 10 லட்சம் வகை விலங்குகளைப் பற்றித் தெரிந்திருக்கிறோம். சிலந்தியில் மட்டும் 35 ஆயிரம் வகை இருப்பதாகச் சிலந்தியியலார் தெரிவிக்கின்றனர்.

இந்த நூற்றாண்டில் 50 புதிய விலங்குகளும் பறவைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இந்தப் புதிய வரவுக்கேற்ப அழிவும் நடந்திருக்கிறது. கி.பி. முதல் நூற்றாண்டு தொடங்கி, இன்று வரை மனிதன் 345 வகை விலங்குகளை அழித்திருக்கிறான். இவற்றுள் முதல் 1950 ஆண்டுகளில் 133 வகை விலங்குகளும், கடந்த 2 நூற்றாண்டுகளில் 212 வகை விலங்குகளும் அழிக்கப் பட்டுள்ளன. இதேபோல 100 வகைப் பறவை இனங்கள் கடந்த நூற்றாண்டில் மட்டும் அழிக்கப்பட்டுள்ளன.

தென்ரொடிஷியாவில் நோய்த்தடுப்புப் பொறுப்பிலிருந்த ஒரு இன்ஸ்பெக்டர் நோயைப் பரப்பும் ஒரு வகை ஈயை அழிப்பதற் காகப் பல காட்டு விலங்குகளை மக்கள் உதவியோடுகொன்று குவித்திருக்கிறார். அந்தக் கணக்கு: 55 யானை, 27,000 மான், 19 சிறுத்தை, 313 வரிக்குதிரை, 377 எருது. ஓராண்டில் மட்டும் அவர் 36,552 விலங்குகளை அழித்திருக்கிறார். அவர் தம் வாழ் நாளில் 5,50,594 விலங்குகளை அழித்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். மனிதர்களிடமிருந்து விலங்குகளைக் காப்பாற்றுதல் அவசியம். இதற்கெனப் பலநாடுகளில் தடைச்சட்டங்கள் உள்ளன.

''நன்றி: அறிவியல் பண்ணை, தமிழ்ப் பல்கலைக் கழகம்''

பேராசிரியர் ச. பாலசுந்தரம்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

இனி, குறிலைச் சார்ந்து வரின் அது முற்றுகரமே எனினும் ஞாயிறு, போவது, வருவது என வரும் குற்றுகரச் சொற்கள் அசையாதற்கண் இறுதி நிற்பவை யிறு, வது என நிற்றலின் பொதுவாகக் குறிலிணை உகரம் என்றார். நுந்தை என்பது குற்றியலுகரமாயும் முற்றியலுகரமாயும் நிற்குமாதலின் அது பற்றி ஈண்டு ஆராய்ச்சியில்லை எனத் தெளிக.

சூ. 6 : இயலசை முதலிரண்டு ஏனைய உரியசை

கருத்து : மேற்கூறிய அசை நான்கற்கும் ஆட்சிக்குறியீடு கூறுகின்றது.

உரை : முதற்கண் கூறப்பெற்ற நேர், நிரை இரண்டும் இயலசை என்றும் ஏனைய நேர்பு நிரைபு இரண்டும் உரியசை என்றும் வழங்கப்பெறும்.

நேர்-நிரை என்பவை இயற்கையாக அமைதலின் இயலசை என்றும் நேர்பு, நிரைபு என்பனவை அவ்இயலசையொடு உகரத்தைக் கூட்டிச் செயற்கையாகச் செய்யப்படுவன ஆதலின் உரியசை என்றும் காரணத்தாற் பெயர் பெற்றன.

சூ 7 : தனிக்குறில் முதலசை மொழிசிதைத் தாகாது.

கருத்து : எதிர்மறை முகத்தான் தனிக்குறில் அசையாகுமிடங் கூறுகின்றது.

உரை : ஈரெழுத்தொரு மொழியையும், தொடர் மொழியையும் சிதைத்து அம்மொழி முதற்கண் நிற்கும் தனிக் குறிலை நேரசையாகக் கொள்ளலாகாது.

எனவே சிதையாது பிரிந்து இறுதிக்கண் நிற்கும் தனிக் குறில் நேரசையாகக் கொள்ளத் தகும் என்றவாறாம்.

ஓரெழுத்தொருமொழி சிதைத்தற்கு இயலாமையின் மொழி என்றது ஏனைய இரண்டையுமாம். அஃதாவது

கனி, கனா, கனல், வரால் என்பவை நிரையசையாகக் கொள்வதன்றி நேர் நேர் எனச் சிதைத்தல் கடாதாம். பருதி

வராளி என்பவை நிரைநேராதலின்றி அவற்றை நேர்நிரையாகவும் நேர் நேர் நேராகவும் சிதைத்தல் கூடாதாம். பருதி முதலியவற்றை நிரைநேராகக் கொள்ளுமிடத்து இறுதி நின்ற தனிக்குறில் நேரசையாயினவாறு காண்க.

இனிச் சிதையாமல் மொழித்தன்மை பெற்ற தனிக்குறில் சீர்க்கண் நிற்பின் முதற்கண் தனிக்குறில் நேரசையாகும். அவ்வழி அது விட்டிசைக்கும் என்றும் உய்த்துணர்க.

இஃது உய்த்துக்கொண்டுணர்தல் என்னும் உத்தி.

எ-டு:- "அஆ இழந்தானென் றெண்ணப் படும்"
"நொ அலையல் நின்னாட்டைநீ"
"அஇ உஅம் மூன்றும் சுட்டு" என வரும்.

சூ 8 : ஒற்றெழுத் தியற்றே குற்றியலிகரம்

கருத்து : அசைகோடற்கண் குற்றியலிகரத்தின் நிலைமை கூறுகின்றது.

உரை : குற்றியலிகரம் அசைக்கு உறுப்பாக நிற்குமிடத்து ஒற்றெழுத்தின் இயல்பினதாகியே நிற்கும். ஒற்றெழுத்தியல் பாவது அலகுபெறாமை. குற்றியலிகரம் மெய்யினை ஊர்ந்து நிற்பதாயினும் அரைமாத்திரையளவே பெறுதலின் உயிர்ப் பிசையாகாமல் ஒற்றியல்பாயிற்றென அறிக.

எ-டு:- "குழலினி தியாழினி தென்ப"
"அருளல்ல தியாதெனின் கொல்லாமை".

இவ்வெண்பா அடிகளில் குற்றியலிகரம் அலகுபெறாமல் ஒற்றியற்றாய் நின்றவாறு காண்க. அலகுபெறின் ஆசிரியத்தளையும் கலித்தளையுமாய்ச் செப்பலோசை பிழைபடும் என அறிக.

சார்பெழுத்து மூன்றனுள் குற்றுகரம் நேர், நிரையசைகளைச் சார்ந்து உரியசைக்கு உறுப்பாய் நிற்கும் என மேற் கூறப்பட்டது. "ஆய்தப்புள்ளி" என்றதனான் அஃது ஒற்றாய் அடங்குதல் பெறப்பட்டது. ஆதலின் எஞ்சி நின்ற குற்றியலிகரத்தின் இயல்பினை இச்சூத்திரத்தான் விதித்தார் ஆசிரியர் என்க.

ஆசிரியர் தேற்றேகாரம் புணர்த்துக் கூறினமையின்

"மற்றியான் என்னுளேன்மன்னோ" எனவும்
"ஈசற்கியான் வைத்த அன்பின் அகன்று"

எனவும் வருதல் இடைக்கால வழக்கு. அதனை வழுவமைதியாக கொள்ளல் தகும். என்னை? அவ் இகரம் குறுகி நில்லாமையான் என்க.

சூ. 9 : முற்றிய லுகரமும் மொழிசிதைத் துக்கொளாஅ
நிற்றல் இன்றே ஈற்றடி மருங்கினும்.

கருத்து : "இருவகை உகரமொடியைந்தலைவரினே" எனக் கூறியமையின் அவை வருமொழியைச் சிதைத்து இணையா என நேர்பசை நிரைபசைகட்காவதோர் மரபு கூறுகின்றது.

உரை : முற்றியலுகரமும் (உம்மையால்) குற்றியலுகரமும் வருமொழியைச் சிதைத்து உரியசை கொண்டு நிற்றலில்லை. அவை அடியீற்றின்கண்ணும் மொழியைச் சிசைத்து நிற்றலில்லை.

ஈற்றடிமருங்கினும் என்னும் உம்மையான் இடையடி மருங்கினும் சிதைத்து நில்லாதென்க.

குற்றியலுகரத்தை உம்மையாற்றழுவிக்கொண்டமையின் நிற்றலின்றே என ஒருமையாற் கூறினார் முற்றியலுகரச் சொற்கள் பெரும்பான்மையும் சாரியை உகர ஈறாக வருதலானும் குற்றியலுகர வீற்று உரியசைகளைச் சிதைத்து நிறுத்துங்கால் அவைதனிக்குறில் எனக் கூறுதற்கு ஏற்படையவாக நிற்றலானும் முற்றியலுகரமும் என அதனை விதந்து கூறினார் என்க.

அஃதாவது "நாணுடையரிவை, பரன்முரப்பு வார்முரசதிரும், வற்றுறு செய்தி நீள்குருந்து" என வருஞ்சீர்களிடத்து வருமொழியைச் சிதைத்து அவற்றின் முதல் நிற்கும் உகரத்தை வாங்கி நாணு டையரியவை பரன்மு ரம்பு வார்மு ரசதிரும் வற்று றுசெய்தி நீள்கு ருந்து என உரியசை கொள்ளப்படா என்றவாறு.

இவை (நேர்பசை நிரைபசை) ஈற்றின்கண் வருதல் வெண்பாவினும், கலிவெண்பாவினும், கொச்சக வெண்பாவினும், வெள்ளைச்சுரிதகத்தினுமாதலின் ஆண்டு வருங்கால்

'புன்கண் உடைத்தாற் புணர்வு'
"பாடறியா தானை இரவு"
"புனைமலர்த் தாரகலம் புல்லு"
அஞ்சொன் மடவார்க் கருளு
"பகவன் முதற்றே யுலகு"
"தானமிழ்தம் என்றுணரற் பாற்று"

என மொழி சிதையாமல் வருதலின்றித்

"தூயவரை நாளுமேத் து" "பண்ணமைதி கண்டுபா டு"
உள்ளத்தால் உற்றுநோக் கு"
"வளத்தொடு நாளும்வா ழு"
பைந்தமிழ்ச் சொற்பழ கு" நல்லறிவை முன்பெருக் கு"

என இறுதிநிற்கும் ஏத்து, பாடு, நோக்கு, வாழு, பழகு, பெருக்கு என்னும் உரிய அசைச்சீர்களைச் சிதைத்து, கு டு து ப ழு என நில்லா என்றவாறு.

சூ. 10 : குற்றிய லுகரமும் முற்றிய லுகரமும்
ஒற்றொடு தோன்றி நிற்கவும் பெறுமே.

கருத்து : உரியசைகள் இயலசைகள் போல ஒற்றொடு கூடியும் நிற்கும் என்கின்றது.

உரை : உரியசைகளின் இறுதி நிற்கும் இருவகை உகரங்களும் ஒற்றெழுத்துக்களொடும் தோன்றி நிற்கப்பெறும். உம்மையை 'ஒடு' வொடு கூட்டுக.

இயலசைக்கண் நிற்கும் ஒற்று இயல்பீறாயும் விதியீறாயும் நிற்கும். உரியசைக்கண் வரும் ஒற்று விதியீறாகவன்றி இயல்பீறாக நில்லாதென்பது விளங்கத் "தோன்றி நிற்கவும் பெறுமே" எனக் கூறினார். தோன்றுதலாவது புணர்ச்சி விகாரத்தால் தோன்றுதல். ஏகாரம் ஈற்றசை.

(எ—டு) : (1) "நாணுத் தளையாக வைகி"
(2) "கனவுக்கொல் நீகண்டது"
(3) "சேற்றுக்கால் நீலம்"
(4; நெருப்புச்சினந் தணிந்த என வரும்.

இனிக் காணும், நோக்கும், புரக்கும், கடவுள், இயவுள் என வரும் இயல்பீறுகள் நேர்நேரும், நிரைநேருமாகிய இயலசைகளாம்-என்றறிக.

இனி, ஈண்டு செலற்கொண்மூ வேண்டுவயிற்குழீஇ (புறம் 161) வண்புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர்தோள் (முருகு) என வருவனற்றுள் ஈண்டுசெலல் என்பது நேர்புநிரை யாதலன்றி ஈண்டுசெயல் என மாவருவாயாகவும் வசிந்து வாங்கு என்பது நிரைபு நேர்பாக அல்லது வசித்துவாங்கு எனப் புலிவருவாயாகவும் சிதைந்து நில்லா. பிறவும் அன்ன.

சூ. 11 : அசையும் சீரும் இசையொடு சேர்த்தி
வகுத்தனர் உரைத்தலும் வல்லோ ராறே

கருத்து : முற்கூறிய அசைகளையும் பிற்கூறும் சீர்களையும் செய்யுளகத்து உணர்ந்துரைக்கும் முறை கூறு கின்றது.

உரை : செய்யுட்கண் பயின்று வரும் எழுத்தானாம் அசைகளையும் அசையானாம் சீர்களையும் தூக்கும், பாவும், வண்ணமும் ஆகிய உறுப்புக்களுக்கேற்ப ஆசிரியம் வெண்பா முதலிய ஓசைகள் வழுவாமல் அவற்றவற்றிற்குரிய இசையொடு சேர்த்தி அவற்றின் வேறுபாடு தோன்ற வகுத்துணர்த்தலும் செய்யுள்இலக்கணம் வல்லார் முறையாகும். உம்மையால் செய்யுள் செய்தலும் அவ்வல்லார்க்கே இயலும் என்று கொள்க.

என்றது ஒரு செய்யுட்கண் அதற்குரியவாக ஓதப்பெற்ற அசைகளும் சீர்களும் வந்தனவாயினும் அதற்குரிய ஓசையின்றி மாறினும், இன்னாவாயினும் வழுவாம் என்றவாறு.

எ-டு :- "வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல". என்னும் வெண்பாவின்கண்
வேண்டுதல் வேண்டாமை இலானடி என ஓதின்
வழுப்படுதலின்
"வேண்டுதல்வேண் டாமை யிலானடி

என அசையை இசையொடு சேர்த்து இசைக்கப் பிழையா தாயிற்று.

"குருத்துக் குறைத்துக் கொணர்ந்து தமது
கருப்புச் செறுப்புப் பரப்பு"
தருக்குப் புணர்ந்து தணந்த தமது
பொருப்புப் புடைத்துப் புடைத்து"

இவற்றுள் வெண்பாவிற் கோதிய அசையும் சீருமே வந்தனவாயினும் இன்னா ஓசைத்தாய்ச் செப்பலோசை

வழுவுதலின் இவை இசையொடு சேராவாயின. வகுத்தனர் உரைத்தல்' என்ற ஆசிரியர் கூற்றினை இடைக்காலத்தார் வகையுளி' என்ப.

இனி, "நுதலது இமையா நாட்டம் இகலட்டுக்
கையது கனிச்சியொடு மழுவே"
(அகம் — கடவுள் வாழ்த்து)

என்புழி 'இகலட்டு' என்னும் சீர் எழுத்துமுதலா ஈண்டிய அடியிற் "குறித்த பொருளை முடிய நாட்டப்" பின்வந்த தாகலின் யாப்பென்னும் உறுப்பினுள் அடங்காது 'இகலட்டுக் கையது கனிச்சியொடு' என மேலடியொடு பொருள் கூடுவதும் இசையொடு சேர்த்தி வகுத்துணர்த்தியதேயாம் என்று கூறி அடியினையும் இசையொடு சேர்த்தி வகுத்துணர்த்தல் வேண்டு மென்பார் பேராசிரியர். அதுவும் சீரொடு சேர்த்தியதே யாகும் என்க. இவ்வாற்றான் அசையும் சீரும் இசை நோக்கினவே என்பது புலனாகும்.

சூ. 12 : ஈரசை கொண்டும் மூவசை புணர்ந்தும்
சீரியைந் திற்றது சீர்எனப் படுமே.

கருத்து : நிறுத்தமுறையானே சீராமாறுகூறத் தொடங்கி இச்சூத்திரத்தான் அதன் இலக்கணமும் வகையும் கூறுகின்றார்.

உரை : இரண்டு அசைகளை இயல்பாகக் கொண்டும் அவற்றின்மேல் ஒன்று இயைய மூவசைகளாகப் புணர்ந்தும் தாள அமைதியொடு இயைந்து அறுதிபெற்றது சீர் எனப்படும்.

சீர் என்னும் பலபொருளொருசொல் ஈண்டுத்தாள அறுதியைக் குறித்து நின்றது. பாணி சீர் தூக்கு என்னும் மூவகைத் தாள நிலைகளுள் சீர் என்பது தாளத்தின் ஒரு கூறு. அசையாலாகிய சீர் ஓரடிக்கண். ஈரசையும் மூவசையுமாக அறுதிபெற்று அடி முடியுமளவும் தொடர்தலின் சீர் எனக் காரணக் குறியீடு பெற்றது. இஃது ஆட்சி பற்றிய குறியீடு.

ஓரசையொடு ஓரசை கூடிய அளவாளே ஒரு சீராக நிறை தலின் "ஈரசை கொண்டும்" என்றும், வெள்ளைக்கென்றும் வஞ்சிக்கென்றும் வேறுபடப் பிறிதோர் அசை புணர்ந்து நிற்றலின் "மூவசை புணர்ந்தும்" என்றும் கூறினார். புணர்த்தும

எனப் பாடங்கொள்வார் உரையாசிரியர். அஃது "இற்றது", என்பதனொடு இயையாமை அறிக.

நால்வகை அசைகளும் தம்முள் ஒருகால் உறழப் பதினாறு ஈரசைச் சீர்களும் பின்னும் ஓரசைக்கூட்டி உறழ அறுபத்து நான்கு மூவசைச் சீர்களும் வரும் என்பது இதனாற் பெறப் படும்.

சூ. 13 : இயலசை மயக்கம் இயற்சீர், ஏனை
உரியசை மயக்கம் ஆசிரிய உரிச்சீர்

கருத்து : ஈரசைச்சீர் ஆமாறும் அவற்றின் வகையும் பெயரும் ஆமாறும் கூறுகின்றது.

உரை : நேரும் நிரையுமாகிய இயலசைகள் தம்முள் ஒத்தும் மாறியும் கூடி வருவன இயற்சீராம். மற்றையவாகிய நேர்பும் நிரைபும் தம்முள் ஒத்தும் மாறியும் கூடி வருவன ஆசிரிய உரிச்சீராம்.

'ஆகும்' என்னும் பயனிலை அடுத்த நூற்பரவினின்றும் தந்துரைக்கப்பட்டது : "முயக்கம்" என்று பாடம் இருந்திருத்தல் வேண்டும். மயக்கம் என்பது திரிபையும் புணர்ச்சியையும் உணர்துமேயன்றி இணைப்பை உணர்த்துதல் தொல்காப்பிய மரபன்று : ஏடெழுதுவோரால் இப்பிழை நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

இயலசையான் வந்தமையின் இயற்சீர் என்றும் உரியசை யான் வந்தமையானும் அவை ஆசிரியத்திற்கு உரிமை யுடைமையானும் ஆசிரிய உரிச்சீர் என்றும் காரணக் குறியீடு பெற்றன. இவ்வாற்றான் இயற்சீர் நான்கும் ஆசிரிய உரிச்சீர் நான்கும் ஆயின. இனி இயலசையும் உரிசையும் தம்முள் மாறி முயங்கி வரும் எட்டுச் சீர்களை விளக்கி உரிமை கூறப்பெறும். இயற்சீர்க்கு எடுத்துக்காட்டும் வாய்பாடும் :

நேர் நேர் — தேமா—2 எழுத்து
நிறை நேர் — புளிமா—3 எழுத்து
நேர் நிரை — பாதிரி —3 எழுத்து ஞாயிறு (குற்றுகரத் தொடல்பால் இரண்டெழுத்தாகவும் நிற்கும்)
நிரை நிரை — கணவிரி— 4 எழுத்து வலியது (மூன்றெழுத்தாகவும் நிற்கும்)

அவரே, கேடில் விழுப்பொருள் தருமார் பாசிலை
வாடா வள்ளியங் காடிறந் தோரே (குறுந் – 16)

இதனுள் நான்கு இயற்சீரும் வந்துள்ளமை காண்க.

ஆசிரிய உரிச்சீர்க்கு எடுத்துக்காட்டும் வாய்ப்பாடும் :-

நேர்பு நேர்பு — வீடுபேறு மின்னுபோகு காடுநாணு
மின்னுநாணு

நிரைபு நேர்பு — வரகு சோறு உருமு காடு குருகுபேணு
அரவு நாணு

நேர்பு நிரைபு — பாறு குருகு, பன்னுகுருகு நீடுகுரவு
மன்னு புறவு

நிரைபு நிரைபு — கடறுமருது தடவு மருது கடறுவிரவு
அரவு விரவு

இவை வாய்பாடு

"வெளிற்றுப் பனந்துணியின் வீற்று வீற்றுக் கிடப்ப"
(புறம் 35)

"வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்ந்தோள்"
(முருகு - 70)

"பூண்டுகிடந்து வளரும் பூங்கட் புதல்வன்"
நறவுண் மண்டை அடக்கலின் இரவுக் கலித்து (அகம் 96)

எனவரும். இவற்றுள் நான்கு ஆசிரிய உரிச்சீரும் வந்துள்ளமை காண்க. இவை குற்றுகர முற்றுகர வேறுபாட்டான் இயற்சீர் இரண்டு எழுத்து முதல் நான்கு எழுத்து வரையும் ஆசிரிய உரிச்சீர் இரண்டெழுத்து முதல் ஆறு எழுத்து வரையும் பெற்று வரும். எழுத்து எண்ணப்பெறுமிடத்து ஒற்றும் குற்றுகரமும் குற்றிகரமும் ஆய்தமும் எண்ணப்பெறா என்பது பின்னர்க் கூறப்படும்.

சூ. 14 : முன்னிரை உறினும் அன்ன வாகும்.

கருத்து : உரியிசைகளொடு நிரையசை கூடி அமையுமாறு கூறுகின்றது.

உரை : உரியசைகளின் முன்னர் இயலசையாகிய நிரையசை வந்து கூடி நிற்பினும் அவை ஆசிரிய உரிச்சீர்களை ஒப்பனவாகும்.

நிரை உறினும் என்றமையான் நிற்பலவை உரியசைகள் என்பதும் அடுத்த நூற்பா "நேரவண் நிற்பின் இயற்சீர்ப்பால" என்பதனான் இவை ஆசிரிய உரிச்சீரின் பாற்படும் என்பதும் பெறப்பட்டன.

ஆசிரிய உரிச்சீராகும் என்னாது "அன்னவாகும்" என உவமித்துக் கூறியதனான் இவை தளை கொள்ளுமிடத்து இயற்சீரைப்போலத் தளைகொள்ளும் என அறிக.

(எ-டு) நேர்புநிரை — (நீடுகொடி) — பாதிரி போலத்
(நாணுத்தளை) தளைகொள்ளும்

நிரைபு நிரை — (உரறுபுலி) — கணவிரி போலத்
(விரவுபுலி) தளைகொள்ளும்

ஓங்குமலைப் பெருவிற் பாம்புநாண் கொளீஇ (புறம் 55)

களிற்றுக்கணம் பொருத கண்ணகன் பெருந்தலை (புறம் 64)
என வரும் இவை இரண்டும் ஆசிரியத் தளையாயின.

எண்டுசெலல் கொண்மூ வேண்டு வயின் குழீஇ (புறம் 161)
இது வெண்டளையாயிற்று.

இவை மூன்று முதல் ஐந்தெழுத்து வரை பெறும்.

சூ. 15 : நேரவண் நிற்பின் இயற்சீர்ப் பால

கருத்து : உரியசைகளொடு நேரசை கூடி அமையுமாறு கூறுகின்றது.

உரை : அதிகாரத்தான் நின்ற உரியசைகளின் முன்னர் இயலசையாகிய நேரசை வந்து கூடி நிற்பின் அவை இயற்சீரின் பாலவாகும். 'இயற்சீர்ப்பால' என்றதனான் தளை நிலைக்கு நிரையீற்றியற்சீர் போலவாகும் என அறிக.

(எ-டு) நேர்புநேர் — (போதுபூ) — இது பாதிரிபோலத்
— (மேவுசீர்) தளை கொள்ளும்

நிரைபுநேர் — (விறகு தீ) — இது கணவிரிபோலத்
(அரவுநா) தளை கொள்ளும்

என வரும்.

நீத்துநீர்ப் பரப்பின் நிவர்ந்துசெல் மா்ன்றோர்

நீத்துநீரப் பரப்பின் என ஆசிரியத் தளை கொண்டது.
நிவந்துசெல் மான்றேர் என வெண்டளை கொண்டது.

இவை இரண்டு முதல் நாலெழுத்து வரை பெற்று வரலாகும்.

சூ. 16 : இயலசை ஈற்றுமுன் உரியசைவரினே
நிரையசை இயல ஆகுமென்ப.

கருத்து : இயலசைகளின் முன் உரியசைகள் கூடி அமையுமாறு கூறுகின்றது.

உரை : நேரும் நிரையுமாகிய இயலசைகளின் முன்னர் நேர்பும் நிரைபுமாகிய உரியசைகள் வரின் மேல் நிரையசைக்கு ஓதிய இயல்பினவாகும்.

என்றது நிரையீற்றியற் சீர்களின் பாற்பட்டு அவைபோலத் தளை கொள்ளும் என்றவாறு.

(எ–டு) நேர்புநேர் — (போரேறு) இவை பாதிரிபோலத்
(நன்னாணு) தளை கொள்ளும்
நேர்நிரைபு — (காருருமு)
(பூ மருது)
நிரைபுநேர் — (கடியாறு)
(பெருநாணு)
நிரைநிரைபு — (நரையுருமு) இவை கணவிரிபோலத்
(மழகளிறு) தளை கொள்ளும்

காமஞ்செப்பாது கண்டதுமொழிமோ : ஆசிரியத்தளை
கடுஞ்சினத்த கொல்களிலும் கதழ்பரிய
பரிமாவும் : ,,
கனவாண்டு மருட்டலும் உண்டே இவடான் ,,
உருமுரற்று கருவிய பெருமழை தலைஇ
(அகம் 158) ,,
கருங்கோட்டுச் சீறியாழ் பணையமிது கொண்டு (புறம்-316)

இது வெண்டளை பெற்றது. இவை இரண்டு முதல் ஐந்தெழுத்து வரை பெறும். பிறவும் அன்ன

ஆக ஈரசைச் சீர் பதினாறனுள் இயற்சீர் பத்தாகவும் ஆசிரிய உரிச்சீர் ஆறாகவும் வருமாறு கண்டுகொள்க.

சூ 17 : அளபெடை அசைநிலை ஆகலும் உரித்தே.

கருத்து : செய்யுட் சீரின்கண் உயிரளபெடை எய்தும் இயல்பு கூறுகின்றது.

உரை : தனிமொழிக்கண் சொல்லின் உறுப்பாகி நிற்கும் அளபெடை உயிர்களும் சொற்பொருளை வேறுபடுத்தும் அளபெடை உயிர்களும், இருமொழிப் புணர்ச்சிக்கண் தோன்றி வரும் அளபெடை உயிர்களும் அல்லாத செய்யுளிசை நிறைதற்கு "நீட்டம் வேண்டின் அவ்வளபுடைய கூட்டி எழுஉதுதல்" என்றதனான் வரும் உயிரளபெடையாகிய செயற்கையளபெடைக் கண்வரும் குற்றுயிர்களின் மாத்திரை யிசை சீர்களின்கண் அசைக்கு உறுப்பாய் அலகு நிலை, பெறுதலும் உரியதாகும். எதிர்மறை உம்மையால் அசை நிலையாய் அலகு பெறாமையும் உரித்து.

செய்யுட்கண் ஓசை நிறைத்தற்பொருட்டு நெட்டெழுத்தின் விகாரமாய் அளபெடுத்து ஒத்த குற்றெழுத்தாகி நிற்கும் உயிர் ஒவ்வொன்றும் மாத்திரை வகையான் தனித்தனி நேரசை யாதற்கு உரித்தாகலின் "ஆகலும் உரித்தே" என்றும் சேய்மை விளிக்கண்ணும், பண்டமாற்றின் கண்ணும் நாவலோசையின் கண்ணும் அளபிறந்து உயிர்த்துவரும் இசைகள் அலகு பெறாமையின் எதிர்மறை உம்மை கொடுத்தும் ஓதினார்.

குரீஇ - ஆடூஉ முதலாயின நீட்டம் வேண்டிக் கூட்டி எழுப்பப்படாமல் தனிமொழிக்கண் சொல்லுறுப்பாய் நிற்கும் அளபெடைகள்.

நிலைஇ, தழீஇ - விராஅய் முதலியன சொற்பொருளைவேறு படுத்தும் தனிமொழிக்கண் உறுப்பாய் நிற்கும் அளபெடைகள். இவை இரண்டும் அலகுபெற்று அசைநிலையாகியே நிற்கும்.

உவாஅப்பதினான்கு, பலாஅக் கோடு அதாஅன்று முதலியன புணர்ச்சி வேறுபட்டான் மிக்கு வந்த அளபெடை

இஃது ஓரோவழி அலகு பெற்றும் ஓரோவழி அலகு பெறாதும் நிற்கும்

எ - டு : நற்றாள் தொழாஅர் எனின். "எருது காலுறாஅ திளையர் கொன்ற" இவை தளைநிலை பெற்றுச்

செய்யுட்கண் ஓசை நிரப்பவந்த அளபெடைகள் ஆதலின் அலகு பெற்று அசைநிலையாகியே நிற்கும்.

சேரமாஅஅன் வருக! நம்பீஇஇ செல்க! (சேய்மைவிளி)
உப்போஒஒ என உரைத்து மீள்வாள் (பண்டமாற்று)
கலம்போஒய்ப் போஒய்க் கௌவைதரும் (இசை)
நாவலோஒஒ என்றிசைக்கும் நாளோதை
(நாவலோசை)

இவை அசைநிலையாய் அலகுபெறா.

இனி இராஅக்காக்கை, இறாஅ வழுதுணங்காய் எனப் புணர்மொழிக்கண் வரும் அளபெடை ஒரோவழி அலகு பெற்றும் பெறாமையுமாக நிற்கும் ஆதலின் இடனறிந்து கொள்க.

செய்யுட்கண் ஓசை நிரப்பவரும் அளபெடை, சொல்லுக்கு உறுப்பாய்ப் பொருள் வேறுபாடு செய்யாமல் நெட்டெழுத்தின் விகாரமாய்க் கொள்ளப்படுவதாகலின் அது பின்னிற்கும் எழுத்துக்களொடு கூடி நிரையசையாதலில்லை. மூன்று மாத்திரையேயன்றி நான்கு மாத்திரையாக அளப்பெடுப்பினும் அவை தனித்தனி நேரசையாகவே நிற்கும்.

(எ-டு) உறாஅர்க் குறுநோய் உரைப்பாய்க் கடலைச்
செறாஅஅய் வாழிய நெஞ்சு.

எனப் புலி செல் வாய் ஆகி நிற்கும். அவ்இரண்டு மாத்திரையையும் கூட்டி ஒரு நெட்டெழுத்தாகவோ குறிலிணையாகக் கொண்டு நிரையசையாகவோ எண்ணப்படா. தனித்தனி நேரசையாகவே எண்ணப்படுமென்க. என்னை? ஒரு நெட்டெழுத்தானது ஒரு மாத்திரை நீண்டவிடத்தும் செய்யுளோசை நிரம்பாமையானன்றே மீண்டும் அளபெடுத்தது அதனான் அவை ஒரு முயற்சியான் வந்த இரண்டு மாத்திரையன அல்லவாகலின் அம்முயற்சி வேறுபாடு புலப்படத் தனித்தனி அலகிடப்பெறுவன ஆயின.

இனி, சொல்லிசையளபெடைகள் சொல்லுக்கு உறுப்பாக நிற்றலின் பின்னுள்ள எழுத்தொடுகூடி நிரையசையாதற்கும் ஏற்கும் என அறிக.

(எ-டு) உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
(புறம் 72) இதனுள் நிலைஇய என்பது கணவிரி யாகும்.
மென்றோள் பெறனசைஇச் சென்ற வென்
னெஞ்சே (அகம்-9)
தீங்கனிப் புறவமொடு வேம்பு மனைச் செரீஇ
(புறம் 127)

என்பவற்றுள் நின்ற பெறனசைஇ என்பது புலி வருவாய் ஆகவும் செரீஇ என்பது புளிமா வாகவும் நின்றன. பிறவு மன்ன.

இனி இந்நூற்பாவிற்கும், பொதுவாக அளபெடைக்கும் உரையாசிரியன்மார் கூறும் விளக்கங்கள் தொல்காப்பிய நெறிக்கும் தமிழ் மரபிற்கும் ஒவ்வாமையை விளக்கப்புகின் பெருகுமாதலின் ஈண்டும் பிறாண்டும் உரைத்தனவற்றால் ஓர்ந்து உண்மை உணர்க. [அளபெடை பற்றி முன்னுரையிற் பார்க்க.]

சூ 18 : ஒற்றளபெடுப்பினும் அற்றென மொழிப

கருத்து ; ஒற்றெளபெடை சீரின்கண் நிற்குமாறு கூறுகின்றது.

உரை : ஒற்றெழுத்து அளபெடுத்து நிற்பினுப் மேற்கூறிய உயிரெளபெடையின் தன்மைத்தே ஆகும்.

அஃதாவது அசைநிலைபெறுதலும் பெறாமையும் ஆம் என்றவாறு.

(எ – டு) கண்ண் தண்ண்ணெனக் கண்டும் கேட்டும்
அம்ம் பவள்வரி நெடுங்கண்
விலஃஃகி வீங்கிருள் ஓட்டுமே
"-அங்ங் கனிந்த அருளுடையார்"

எனவரும் இவற்றுள் கண்ண் —

அம்ம்.-அங்ங் என்பவை தேமாவாகவும் விலஃஃகி என்பது புலிசெல்வாய் ஆகவும் அலகுபெற்று அசைநிலை எய்தின. தண்ண்ணென என்பது இன்னோசைத்தாய் நின்றதன்றி அலகு பெற்றதன்று - அலகிடின் மாசெல்சுரமாய் அகவலோசைபிழைக்குமென்க.

இனிக்குறிப்போசையின்கண் ஒற்றிசை நீண்டு வருபவையும் அலகு பெறா எனக்கொள்க

எ-டு : கஃ(ஃஃ) றென்னும் கல்லதரத்தும்
விண்(ண்ண்) எனவிசைத்தது
ஒல்(ல்ல்) லென ஒலித்தது. என வரும்.

இனி நூன்மரபின்கண் ஒற்றளபெடை பற்றியாதொன்றும் கூறாமல் ஆசிரியர் ஈண்டு உடம்பொடு புணர்த்திக் கூறியதனான் ஒற்றளபெடை செய்யுள் வழக்கிற்கன்றிப்பரவை வழக்கினுள் வாராதென்றுகொள்க. இதனான் அளபெடை இருவகைப்படுமென்றும் இவ் இரண்டானும் தொடைகொள்ளப் படும் என்றும் உய்த்துணர்ந்து கொள்க.

இனி நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணியுள் வரும் அம்பொரைந்து டைய்ய காமனைய்ய னென்ன அந்தணன் நம்பு நீரர் அல்லர் நன்கு ரங்கு நீர ராயினும் தங்கு ரவ்வர் தாங்கொ டுப்பின் நெஞ்சு நொந்து தாழ்வர்தாம் பொங்க ரவ்வ வல்கு லாரெ னப்பு கன்று சொல்லினான் (சுரம — 3)

என்னும் பாடலைக் காட்டி இதனான் யகர ஒற்றில் வழி ஓசை அவ் ஒற்றை உண்டாக்கிற்று அஃது அளபெடுத்தது வந்துழிக்காண்க எனக் கூறியுள்ளார்.

இக்கருத்து ஈண்டைக்கு ஏலாததொன்றாகும். மற்று
“அகரத்திம்பர் யகரப்புள்ளியும்
ஐயென்நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்”

என்னும் விதியான் போலி வகையான் வந்த

“அம்பொ ரய்ந்து டய்யகாமனய்யனென்ன என நின்ற பாடத்தை, ஐகாரப்போலி பயன்படுமாற்றை ஓராமல் “அம்பொரைந்து டைய்ய காமனைய்யனென்ன” எனப்பாடங் கொண்டு யகரஒற்று இல்வழி வந்த ஒற்றென மாறுபடக் கூறியுள்ளார். அது போலி வகையான் வந்த இயல்பான ஒற்றேயாகும். அப்பாடலுள் அய்ந்துடய்ய, தங்குரவ்வர், பொங்கரவ்வ எனவந்த யகரவகர ஒற்றுக்கள் விரித்தல் என்னும் விகார வகையான் வந்தனவாம் என அறிக.

இவ் அளபெடைகள் அசைநிலையாகி அலகுபெறும் இலக்கணத்தை ஈண்டுக் கூறினார், இவை ஈரசைச்

சீர்களினன்றி மூவசைச் சீர்க்கண் வாரா என்பதையும் வரின் அவை இரண்டு ஈரசைச் சீர்களாகப் பிரியும் என்பதையும் உணர்த்துதற்கென அறிக. இனி மூவசைச் சீர்கள் வருமாறு கூறுவார்.

சூ 19 : இயற்சீர் இறுதிமுன் நேரவண் நிற்பின்
உரிச்சீர் வெண்பா ஆகும் என்ப.

கருத்து : மூவசைச்சீருள் வெண்பாவுரிச்சீர் அமையவருமாறு கூறுகின்றது.

உரை : இயலசை மயக்கமாகிய நான்கு இயற்சீர்களின் இறுதிக்கண் நேரசை வந்து அவ்விடத்துக் கூடி நிற்பின் அவை வெண்பா உரிச்சீர் ஆகும் எனக் கூறுவர் புலவர்.

'அவண்' என்றதனான் வெண்பாநடைத்தாகிய கலிப் பாவிற்குத் தளைநிலை வகையரன் உரிமையாகும் எனக் கொள்க.

இதனான் உரியசை மயங்கிய இயற்சீரின் பின் நேரசை வந்து கூடிய மூவசைச் சீர்கள் வெண்பா உரிச்சீராகா என்பதும் பெறப்பட வைத்தார். வெண்பா உரிச்சீர் வருமாறு

(எ-டு) நேர் நேர் நேர் — மாசெல்வாய்
நிரை நேர் நேர் — புலிசெல்வாய்
நேர் நிரை நேர் — மாவருவாய்
நிரைநிரை நேர் — புலிவருவாய்

இவை தலைநிலை எய்துங்கால் "வெண்சீர் ஈற்றசை நிரையசை இயற்றே" என்பதனான் நிரையீற்றியற் சீர்போல நின்று வருஞ்சீர் நேரசையொடுகூடி வெண்டளையாகும் — நிரைமுதலாகிய வெண்சீர்வரின் கலித்தளையாகும்.

காமன்கா னென்று கருவூரார் பாராட்டத்
தாமந்தாழ் கோதை வருவானை - யாமும்
இருகுடங்கை யானெதிரே கூப்பித் தொழக்கண்
டொருகுடங்கை யாயின கண்.

வெண்சீர் நான்கும் வந்தமை காண்க. இவை மூன்று முதல் ஐந்தெழுத்து வரை பெறும்.

சூ. 20 : வஞ்சிச்சீரென வகைபெற் றனவே
வெண்சீரல்லா மூவசையான

கருத்து : வஞ்சியுரிச்சீர் அறுபதும் ஆமாறு கூறுகின்றது.

உரை : மேற்கூறிய வெண்சீரல்லாத மூவசையான எல்லாம் (அறுபதும்) வஞ்சியுரிச்சீர் என வகுக்கப்பெற்றனவாம்.

"வகை" என்றார் நேரும் நிரையும் ஆகிய அசைகள் முற்றுகரக் குற்றுகர வேறுபாட்டான் வரும் எழுத்தளவை களான் வேறுபடுதலின் அவற்றை வகுத்துணர வேண்டி என்க.

நேரீற்று வஞ்சியுரிச்சீர் - 12,

உதாரணம் - 32, இவை 3 - 7 எழுத்து வரை வரும்

நேர் நேர்பு நேர்	—	(மா போகுவாய்	—	3—	எழுத்து
		(மா மன்னுவாய்	—	4	,,
நேர் நிரைபு நேர்	—	(மா வழங்குவாய்	—	4	,,
		(மாவுரிஞ்சுவாய்	—	5	,,
நிரை நேர்பு நேர்	—	(புலி போகுவாய்	—	4	,,
		(புலி பேணுவாய்	—	5	,,
நிரை நிரைபு நேர்	—	(புலி வழங்குவாய்	—	5	,,
		(புலி உருமுவாய்	—	6	,,
நேர்பு நேர் நேர்	—	(பாம்பு சேர்வாய்	—	3—	எழுத்து
		(மின்னுநேர்வாய்	—	4	,,
நேர்பு நிரை நேர்	—	(பாம்பு வருவாய்	—	4	,,
	—	(மின்னு வருவாய்	—	5	,,
நேர்பு நேர்பு நேர்	—	(பாம்பு போகுவாய்	—	3	,,
		(பாம்பு பேணுவாய்	—	4	,,
		(மின்னுப் போகுவாய்	—	4	,,
		(மின்னுப் பேணுவாய்	—	5	,,
நேர்பு நிரைபு நேர்	—	(பாம்பு வழங்குவாய்	—	4	,,
		(மின்னு உருமுவாய்	—	6	,,
		(மின்னு வழங்குவாய்	—	5	,,
		(பாம்பு உருமுவாய்	—	5	,,
நிரைபு நேர் நேர்	—	(களிறு சேர்வாய்	—	4	,,
		(உருமு சேர்வாய்	—	5	,,
நிரைபு நிரை நேர்	—	(களிறு வருவாய்	—	5	,,
		(உருமு வருவாய்	—	6	,,
நிரைபு நேர்பு நேர்	—	(களிறு போகுவாய்	—	4	,,
		(உருமுப் பேணுவாய்	—	6	,,
		(களிறு பேணுவாய்	—	5	,,
		(உருமுப் போகுவாய்	—	5	,,

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

மலை முதல் மனை வரையிலும் கண்ட பல கடவுளர்

மு. சண்முகம் பிள்ளை
சிறப்பு நிலைப் பேராசிரியர்
சுவடிப்புலம்-ஓலைச் சுவடித்துறை
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர்.

ஆயுதத்திலுங் முரசிலுங் அமர்ந்துறை அணங்கு

வீரர்கள் கைக் கொண்டிருக்கும் ஆயுதங்களிலும் அணங்கு அமர்ந்து அவர்களுடைய தொழில்களில் வெற்றி நல்குகிறாள்.

'அரவின் பொறியும் அணங்கும் புணர்ந்த
உரவு வில்மேல் அசைத்த கையை' (கலி. 50 : 6 - 7)

எனவருவது விற்படையில் சேர்ந்துறையும் அணங்கைக் குறிப்பிடுகிறது.

பண்டை மன்னர்கள் 'முரசு' என்னும் தம் சின்னத்தைப் பெரிதும் மதித்துப் போற்றி வந்தனர். மன்னரைக் குறிக்கும் பொழுது அவர்தம் முரசு உடைமை ஒரு தனிச் சிறப்பாகக் கூறப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டுப் பெருமன்னர் மூவரும், "பெருமையைக் கொண்ட முரசினை உடைய மூவர்" என்னும் பொருளில் 'நளி கொள் முரசின் மூவர்' என்று குறிப்பிடப் படுகின்றனர். இடி என முரசு ஒலிக்க மன்னர் போரிடைப் பொருது அப் போர்க் களத்திலே வெற்றி முரசு முழக்குவர்.

'முரசு முழங்கு தானை நும் அரசும் ஓம்புமின்'
(புற. 301 : 5)
'உரும் உரற்றன்ன உட்குவரு முரசமொடு
செருமேம் படூஉம் வென்றியர்' (புற. 197. 5 - 6)
'வென்று எறிமுரசின் வேந்தர்' (புற. 112.4)

என்பன புறநானூற்றில் காணும் செய்திகள்.

அரசனுடைய பல்வேறு நிகழ்ச்சிகளைத் தெரிவிப்பதற்கும் முரசு முழங்குதல் உண்டு. காலையிலே அரண்மனையில் ஒலிப்பதை 'நாள்முரசு இரங்கும் இடனுடை வரைப்பு' (புற. 161 : 29) என்பது குறிக்கிறது. அரசர்கள் தமது வீர முரசத்தைச் சிறப்பாகப் போற்றினர். இம் முரசு வைக்கப்

பெற்றிருக்கும் பீடம் 'முரசு கட்டில்' என வழங்கப்படுகிறது. இந்த முரசும் தெய்வத்திற்குரிய சிறப்பைப் பெறுகிறது. இதனை நீராட்டி, இதற்கு மாலை முதலியன அணிவித்துக் குருதிப் பலி கொடுத்துப் போற்றுதல் மரபு.

'மாசு அற விசித்த வார்புறு வள்பின்
மை படு மருங்குல் பொலிய, மஞ்ஞை
ஒலி நெடும் பீலி ஒண் பொறி மணித்தார்,
பொலங்குழை உழிஞையொடு பொலியச் சூட்டி,
குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை'

(புற. 50 : 1 - 6)

'சிலைத்தார் முரசம் கறங்க,
மலைத்தனை' (புற. 36 : 12 - 13)
'பலிபெறு முரசம் பாசறைச் சிலைப்ப' (புற. 362 : 3)
'வாள்மின் ஆக, வயங்கு கடிப்பு அமைந்த
குருதிப் பலிய முரசு முழக்கு ஆக (புற. 369 : 4-5)

எனவரும் பகுதிகள் முரசு தெய்வத்திற்குரிய சிறப்புப் பெறுதலை விளக்குவனவாம். முரசுறை கடவுளுக்குச் செய்யும் வழிபாட்டினைப் பதிற்றுப்பத்தின் முப்பதாம் பாடல் விரிவாக விளக்கி உரைக்கின்றது. முரசு ஒலி கேட்ட மாத்திரத்தில் பிற பெருமன்னரும் குறுநில மன்னரும் நடுங்குகின்றனராம். முரசுறை கடவுளை வழிபடுவோன் மிக்க சினத்துடன் உரக்க உச்சரிக்கப்படும் மந்திரங்களால் குருதியும் கள்ளும் முதலிய பலிகளைக் கொடுக்கிறான். இவன் முரசுறை கடவுளுக்குப் பலியாக இட்ட பிண்டத்தைப் பேய்மகளும், எறும்பு முதலியன வும் நடுங்கி நெருங்காமல் இருக்க, காக்கையும் பருந்தும் உண்ணுகின்றன. போரில் பகைவரைத் தோற்றோடச் செய்து வெற்றிபெற்ற பெருவீரர்களுக்குப் பெருஞ்சோறு வழங்குதற்கு இம் முரசம் அடிக்கப்படுகிறது. இச் செய்திகளை அறிவிக்கும் பாடற்பகுதி வருமாறு :

'பனைகெழு வேந்தரும் வேளிரும், ஒன்று மொழிந்து,
கடலவும் காட்டவும் அரண்வலியார் நடுங்க,
முரண் மிகு கடுங்குரல் விசும்பு அடைபு அதிர,
கடுஞ்சினம் கடாஅய், முழங்கும் மந்திரத்து
அருந்திறல் மரபின் கடவுட் பேணியர்,
உயர்ந்தோன் ஏந்திய அரும் பெறற் பிண்டம்
கருங்கட் பேய்மகள் கைபுடையூ நடுங்க,

நெய்த்தோர் தூஉய நிறைமகிழ் இரும் பலி,
எறும்பும் மூசா இறும்பூது மரபின்,
கருங்கட் காக்கையொடு பருந்து இருந்து ஆர ;
ஓடாப் பூட்கை, ஒண் பொறிக் கழற் கால் ;
பெருஞ் சமம் ததைந்த, செருப்புகல், மறவர்
உருமு நிலன் அதிர்க்கும் குரலொடு, கொளை புணர்ந்து,
பெருஞ்சோறு உகுத்தற்கு, எறியும்—
கடுஞ்சின வேந்தே!—நின் தழங்கு குரல் முரசே !
(பதிற். 30 : 30-44)

மன்னவன் கோயிலில் முரசம் வைக்கும் கட்டிலும் புனிதமாகப் போற்றப்படுகிறது. நீராட்டி வருதற்பொருட்டு முரசம் எடுத்துச் சென்றது உணராது, மெல்லிய நல்லாடை விரிக்கப் பெற்றிருந்த முரசுகட்டிலைத் தூங்குதற்குரிய மஞ்சம் எனக் கருதிப் புலவர் மோசிகீரனார் படுத்து உறங்கி விடுகிறார். பின் அவ்விடம் வந்த சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை சினத்துடன் கட்டிலை அணுகுகிறான். முரசு கட்டிலில் தூங்குவது புலவர் என்பது தெரிந்ததும், அவர் நடந்து வந்த களைப்பால் முரசுகட்டில் என்பது தெரியாது படுத்துத் தூங்கிவிட்டனர் என்று எண்ணிய மன்னன் அவர் துயில் எழும்வரை கவரியால் விசிறியும் நின்றான். விழித்தெழுந்தபின் அவர் தாம் புரிந்த தவற்றையும், மன்னன் தமக்கு அளித்த பெருமதிப்பையும் போற்றிப் புகழ்கின்றார்.

குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை, எண்ணெய்
நுரை முகந்தன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது எறிய என்னைத் தெறுவர,
இருபாற் படுக்கும் நின் வாள்வாய் ஒழிந்ததை
அதூஉம் சாலும், நல் தமிழ் முழுது அறிதல் ;
அதனொடும் அமையாது, அணுக வந்து, நின்
மதனுடை முழவுத் தோள் ஓச்சி, தண்ணென
வீசியோயே ! (புற. 50:5-13)

என்பது புலவர் வாக்கு. இங்கே முரசு கட்டில் எவ்வளவு மதிப்புடன் போற்றப்பட்டது என்பது போதரும். அதற்குப் பிழை செய்தார் புலவர் அல்லராயின் அவர் கொலையுண்டிருப்பர் என்பதும் புலனாகிறது. முரசும் முரசுறை தெய்வமும் மன்னர் போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரித்தாக விளங்கியமை மேற்குறித்த நிகழ்ச்சியால் போதரும்.

பேய், பிசாசு, பூதம்

மன்னர்கள் போரிடும் போர்க்கள நிகழ்ச்சிகளும், அவர்தம் வெற்றிச் சிறப்புகளும் பேசப்படும் இடத்துப் பேய், பிசாசு, பூதம் முதலிய பெருந்துன்பம் விளைக்கும் சிறுதெய்வங்கள் இடம் பெறுகின்றன. 'வருத்துகின்ற தெய்வத்தன்மை, 'அணங்கு சால் உயர் நிலை' (முருக. 299) எனப்படும. மக்களுக்குப் பேரச்சத்தை விளைவித்து வந்தமையால், இவை 'உரு கெழு தெய்வம்' (நற். 398:1) என வழங்கப்பட்டன. 'உரு கெழு தெய்வம்' என்பது அச்சத்தை விளைக்கும் தெய்வம் என்னும் பொருளாம். அவையாவன "பேயும், பூதமும், நிரையப்பாலரும், அணங்குதல் தொழிலராகிய சவந்தின் பெண்டிர் முதலாயினாரும்" என்பர். பேயினத் தெய்வங்கள் பாசம், பிசாசு, கழுது, பழு, அணங்கு, கூளி, பூதம் முதலிய பெயர்களைப் பெறுகின்றன.

'பானாள் கொண்ட கங்குல் இடையது
பேயும் அணங்கும் உருவு கொண்டு, ஆய்கோல்
கூற்றக் கொல்தேர், கழுதொடு கொட்ப'
(மதுரை. 631-633)

எனவரும் மதுரைக் காஞ்சியடிகளில் பேய், அணங்கு, கழுது என்பன குறிக்கப்பட்டுள்ளன. "பேய்களும் வருத்தும் தெய்வங்களும் வடிவு கொண்டு கழுதுடனே சுழன்று திரிய ; கழுது பேயில் ஒரு சாதி" என்று மேற்குறித்த மதுரைக் காஞ்சி அடிகளுக்குப் பொருள் உரைக்கின்றார் நச்சினார்க்கினியர். இதனால் கழுது, கூளி, பூதம் முதலியன பேயினத்தைச் சேர்ந்தவை என்றும், அவற்றுள் ஒன்றற்கு ஒன்று உருவம் செயல்கள் முதலியவற்றில் மாறுபாடு கொண்டவை என்றும், நடு இரவில் இவை உருபு கொண்டு சுழன்று திரியும் என்பதனால் பிறகாலங்களில் இவற்றின் உருவம் வெளிப்படாது கரந்து உறையும் என்றும் அறியலாம். இவற்றைக் 'கூளிச் சுற்றம்' என்பர். இவை குட்டையும் நெட்டையுமான வடிவு வேற்றுமையுடையனவாம். உதியஞ்சேரலாதன் தன் போர்ப் படை வீரர்களுக்குப் பெருஞ்சோறு அளித்த காலத்துப் போர்க் களத்தே கூடியிருந்த குட்டை நெட்டை கட்டையான பேய் களின் உருப்போன்ற சிறிய பெரிய குன்றங்கள் காட்சியளிக் கின்றன என்று உவமிக்கின்றார் மாமூலனார்.

"துறக்கம் எய்திய தொய்யா நல்இசை
முதியர்ப் பேணிய, உதியஞ்சேரல்

பெருஞ்சோறு கொடுத்த ஞான்றை, இரும்பல்
கூளிச் சுற்றம் குழீஇ இருந்தாங்கு,
குறியவும் நெடியவும் குன்று தலை மணந்த
சுரன்'' (அக. 233 : 7-12)

என்பது மாமூலனாரின் வாக்கு. இவையெல்லாம் கொற்றவையின் பரிவாரங்களாம். இவைகள் கொற்றவைக்குரிய பணி செய்து, அவள் அருளைப் பெற்று வாழ்வன. காடு, கெழு செல்வியாகிய கொற்றவைக்குப் பேய் முதலியவை வேடிக்கைப் பேச்சுக்களாகிய நொடிகளை உரைத்து அவளை மகிழ்வித்தலும் பேசப்படுகிறது.

'துணங்கை அம் செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு'
(பெரும். 459)
பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய் நொடித்தாங்கு'
(கலி. 89 : 8)

என வருவன காடுகெழு செல்விக்குப் பணிபுரியும் பேய்களைக் குறிப்பன.

பேய் பிசாசுகளிலும் ஆண் பெண் பால் வேற்றுமை உண்டு. இரவுக் குறியிடத்துக் காதலனை எதிர்நோக்கி நின்ற தலைவியைப் பிசாசு என்று கருதி அஞ்சி உரையாடிய முதுபார்ப்பான் நிகழ்ச்சி கூறும் கலித்தொகைப் பகுதியில் அப் பார்ப்பான் தன்னை ஓர் ஆண் பிசாசு என்று கூறிக் கொண்டு அவளை அச்சுறுத்தப் பார்க்கிறான்.

'கைப் படுக்கப்பட்டாய், சிறுமி ! 'நீ — மற்றுயான்
ஏனைப் பிசாசு ; அருள் என்னை நலிதரின்,
இவ் ஊர்ப்பலி நீ பெறாமல் கொள்வேன்'
(கலி. 65 : 16 - 18)

என்பது முதுபார்ப்பான் வாக்கு. இதில் அவன் தன்னை ஓர் ஆண் பிசாசு எனச் சுட்டி 'யான்' ஏனைப் பிசாசு' என்று தலைவியை நோக்கி மொழிகிறான். மேலும், பேய் எனப் பொதுப்பட வழங்குவதோடு பேய்மகள், பேய்மகளிர் எனச் சிறப்பித்துப் பல இடங்களிலும் பேசப்படுதலும் ஈண்டு உரைத்தகும்.

பேய்களின் உருவத் தோற்றத்தைச் சங்கப் பாடல்கள் பல்வேறு வகையாக வருணித்துள்ளன. அவற்றால் அவற்றின்

தோற்றம் ஒருவாறு நமக்குப் புலப்படுகிறது. பொதுவாகப் பேய்கள் கண்ணுக்கு இனிய காட்சியை உடையன வல்ல. தூய்மையும் நனமணமும் வாய்க்கப் பெற்றன வல்ல இவை. குழந்தை பெற்றதனால் மேனி அழகு குன்றியிருந்த ஒரு தலைவி தன்னைப் பேய்க்கு ஒப்பிட்டும் தலைவன் விரும்பிச் சென்று சேரும் பரத்தையர் அழகும் தூய்மையுமுடையர் என்றும் எடுத்துக்காட்டும் குறிப்பால் இது உய்த்துணரப்படும்.

'தூயர் ; நறியர் — நின் பெண்டிர் :
பேஎய் அனையம் யாம் ; சேய் பயந்தனமே'
(ஐங். 70 : 4 - 5)

என்பது பரத்தையரோடு பொழுது போக்கிவந்த தலைவனைக் குறித்துத் தலைவி உரைக்கும் உரை. பேயின் தலை தாழை மரத்தின் தோற்றம் போல் உள்ளது (அக. 130 4) 'கவைத்தலைப் பேய் மகள்' (பதிற். 13:15) எனவரும் தொடர் பேய்களின் தலை இரண்டாகப் பிளவுபட்டுத் தோன்றும் என்பதைக் குறிப்பிடுகிறது. கவைத்தலைப் பேய்கள் ஒரு தனி இனமாக இருக்கும் போலும்.

இப் பேய்களின் கண்கள் முரசின் கண்கள் போன்றவை (பட். 236) ; கொடிய கண்கள் என்னும் பொருளில் 'கருங்கண் பேய்' (பதிற். 22 : 37) என்றும் கூறப்படுகிறது. 'கருங்கண் - கொடிய கண்' என்பது பழைய உரை- இதற்கு விளக்கம் எழுதிய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள், 'செங்கண்ணையுடைய பேய் ஆதலின் கரியகண் என்னாது கொடிய கண்' என்றார் என்று பேயின் கண்கள் செந்நிற மானவை என்பதைத் தெரிவிக்கிறார். பேயின் பார்வை கடுமையாக இருக்கும். 'கடு நோக்கத்துப் பேய்' (மதுரை. 161), காதுகளில் வெள்ளாட்டு மறியைக் காதணியாகப் பூண்டிருக்கும் (சிறுபான். 197), வலிய வாயினைக் கொண்டிருக்கும் (நற் 73 : 2) ; மேல் நோக்கி எரியும் நெருப்புக் கொழுந்து சாய்ந்தாற் போன்ற நாக்கு உண்டு (சிறுபாண். 196) இவற்றின் பற்கள் ஒன்றுடன் ஒன்று மாறுபட்டுத் தோன்றும் நீட்சி யுடையவை (புற. 356 : 2) யானைத்தந்தம் போன்று வாலிதாய் விளங்குவன இவை (புற. 371 : 21 : சிறுபாண். 96). பேயின் பற்களை ஒத்துள்ளன யானையின் கால் நகங்கள் (குறுநீ. 180 : 1). செம்முருக்கின் பூங்கொத்தில் காய்த்துப் பழுத்து முற்றிய நெற்றுப் போன்ற அழகில்லாத விரல்களைக்

கொண்டவை. பேயின் பாதங்கள் பிளவுபட்டுத் தோன்றுவனவாம். 'கவை அடிப் பேய்' (மதுரை. 161 - 162 ; சிறுபாண். 197). இவ்வகையான உறுப்புகளைக் கொண்ட பேய்களின் தோற்றம் அழகுடையதல்ல ; கண்டார்க்கு அச்சமும் வருத்தமும் தோன்றச் செய்யும் வடிவம் இப் பேய்களின் வடிவம் (பதிற். 67 : 11 ; புற. 371 : 26). இங்கு விவரித்த தோற்றங்களை நமக்குக் காட்டும் சங்கப்பாடற் பகுதிகள் பின்வருமாறு :

'பேஎய்த் தலைய பிணர்அரைத் தாழை' (அக. 130:4)
'கவைத்தலைப் பேய்மகள் கழுது ஊர்ந்து இயங்க
(பதிற். 13:15)

'எரி மறிந் தன்ன நாவின், இலங்கு எயிற்று,
கருமறிக்காதின், கவை அடிப் பேய்மகள்'
(சிறுபாண். 196-197)

'பழுஉப் பல் அன்ன பருஉகிர்ப் பாவடி
இருங் களிற்று இனநிரை (குறுந். 180:1-2)
'பேய்ககண் அன்ன பிளிறுகடி முரசம்' (பட்டின. 236)
'வேனில் முருக்கின் விளை துணர் அன்ன
மாணா விரல வல்வாய்ப் பேஎய்' (நற். 73:1-2)
'கவை அடி, கடு, நோக்கத்துப்
பேய் மகளிர்' (மதுரை. 161-162)

இக் காட்சிகளை எல்லாம் ஒருசேரப் பிணைத்தாற் போல அழகுபட நக்கீரர் தமது சொற்சித்திரத்தில் தீட்டிக் காட்டுகின்றார் முருகாற்றுப்படையில்,

'உலறிய கதுப்பின், பிறழ் பல் பேழ்வாய்,
சுழல் விழிப் பசுங்கண், சூர்த்த நோக்கின்,
கழல் கட் கூகையொடு கடும் பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின், பிணர் மோட்டு,
உருகெழு செலவின், அஞ்சுவரு பேய்மகள்
(முருகு. 47–51)

என்பது முருகாற்றுப்படையில் காணும் பேய்மகளின் காட்சி.

பேய்கள் உருவத்தில் மிகவும் குள்ளமானவை. "வேறு பல் உருவின் குறும்பல் கூளியர்" (முருகு. 282) என்பர். குட்டை வடிவமானது பற்றி வந்த பெயரே 'கூளி' என்பது. கலித்தொகை கூறும் குறளும் கூனுமான காதலர் தமது சந்திப்பில் ஒருவரை

ஒருவர் காமுற்றாராய் தங்கள் உருவத்தையும் எண்ணங்களை வெளியிட்டு, மாறி மாறிப் பேசிய உரையாடலில் இறுதியாகக் குறளை நோக்கிக் கூனி,

"ஆங்கு. ஆக ! சாயல் இன் மார்ப ! அடங்கினேன் ; ஏஎ
பேயும பேயும் துள்ளல் உறும்' எனக்
கோயிலுள் கண்டார் நகாமை வேண்டுவல் ;
தண்டாத் தகடுஉருவ ! வேறாக் காவின்கீழ்ப்
போதர் ; அகடு ஆரப்புல்லி முயங்குவேம்"

(கலி. 94 : 37-41)

என்று அவனை விரும்பி மொழிகின்றாள். இக்குறளனையும் கூனியையும காண்பார் பேயும் பேயும் துள்ளல் போலும் எனப் பிறர் நினைப்பர் என்பதனால் பேய்களின் குறுகிய வடிவம் நமது காட்சிக்கு இலக்காகிறது.

பேய் ஏறி நடத்தும் ஊர்தியாக அமைவதும் பேய்தான் ; 'பேய் மகள கழுது ஊர்ந்து இயங்க' (பதிற். 13 : 15) என்பதனால் பேய்ச்சாதியில் ஓர் இனமான கழுதுகள் பேய்களுக்கு ஊர்தியாகப் பணி செய்கின்றன என்பது போதரும். இவை ஊர் எல்லாம் தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நடு இரவில் எங்கும் நடமாடித் திரியும். பேய்கள் இரவில் நடமாடுதலைப் புலவர் பலர் குறித்துள்ளனர்.

"கழுது வழங்கு அரை நாள்" (அக. 260 : 13, 311 : 4)
"கழுது கால் கொள்ளும் பொழுது கொள் பானாள்"
(நற். 171 : 9)
"கழுது வழங்கு யாமத்து அழிதகக் குழறும்"
(அக. 122 : 14)
"கழுது கால்கிளர ஊர்மடிந் தன்றே" (நற். 255 : 1)
"அணங்கு கால் கிளரும், மயங்கு இருள் நடுநாள்"
(நற். 319 : 6)

இப் பேய்கள் சுற்றித் திரியும் இடம் பிணங்களை எரித்தலும் சுடுதலும் செய்யும் சுடுகாடுதான். சுடுகாட்டில் இவை கூட்டம் கூட்டமாகத் திரிந்து கொண்டிருக்கும்.

"பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும்
காடு முன்னினனே கட் காமுறுநன்" (புற. 238 : 4-5)

(தொடர்ச்சி அடுத்த இதழில்)